marxist.tncpim.org 999 477 6471

ஜூலை 2019, விலை ரூ.15.00

மார்க்சிஸ்ட்

தத்துவார்த்த மாத இதழ்

2018 ஜனவரி முதல் ஒலி இதழாகவும் வெளியாகிறது



தேர்தல் விளம்பரம் ஊடகங்கள் !

* கார்ல் மார்க்சின் கடைசி ஆண்டுகள்
* சமகாலத்தில் சாதி

மார்க்சிஸ்ட் தத்துவார்த்த மாத இதழ்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழாக்கம் - *மின்னூல் வெளியீடு :*

FreeTamilEbooks.com

பதிவிறக்கம் செய்ய -

http://FreeTamilEbooks.com/ebooks/marxist_monthly_journal_july

மின்னூலாக்கம் - அ. அருந்தமிழ்யாழினி -

aruntamilyazhiniaravindan@gmail.com

This Book was produced using LaTeX + Pandoc

பொருளடக்கம்

1. ஊடகம், விளம்பரம், தேர்தல் : உலகமயமாக்கலுக்கு இரையாகிப்போன நம்பகத்தன்மை

சுகுமார் முரளிதரன்

தமிழில்: வீ. பா. கணேசன்

சில காலத்திற்கு முன்பு வரையிலும் கூட பணம் கொடுத்து சாதகமான செய்திகளை வெளியிடச் செய்வது அல்லது யார் அதிக விலை தருகிறார்களோ அவர்களுக்கு ஊடகம் இடமளிக்கும் என்பது இந்திய ஜனநாயக அமைப்பில் இருந்த கண்காணிப்பு அமைப்புகளுக்கு மிகப்பெரும் சவாலான ஒரு விஷயமாக இருந்தது. நீண்ட காலமாகவே நீடித்து வரும் ஒரு விஷயமாக இருந்தபோதிலும், 2008-ம் ஆண்டில் நடைபெற்ற பல மாநில சட்டமன்றத் தேர்தல்களின் போதுதான் இது ஆழமாக வேரூன்றியிருப்பது வெளிச்சத்திற்கு வந்தது. இதைத் தொடர்ந்து இந்திய பத்திரிக்கை கவுன்சில் அப்போது விரிவானதொரு விசாரணையை மேற்கொண்ட போதிலும் இந்த ஊடகத் தொழிலுக்கேயுரிய 'திறமை' காரணமாக அதன் அறிக்கை வெளிச்சத்திற்கு வராமலே போனது.

ஆனால் இந்நாட்களில் முன்னுரிமைகள் மிக வேகமாக மாறி வருகின்றன. நாடு முழுவதிலும் நடக்கவுள்ள தேர்தல் காலஅட்டவணையை வெளியிட்ட தேர்தல் ஆணையம் போலிச் செய்திகள் எதிரணியின் மீதான அவதூறான பேச்சுக்கள் ஆகிய இரண்டு அபாயங்களை குறிப்பாகச் சுட்டிக் காட்டியது. ஆணையத்தின் அவசர அழைப்பை ஏற்ற சமூக ஊடக நிறுவனங்கள், இணையதள சேவை நிறுவனங்கள் தங்களது செயல் தளங்களின் உள்ளடக்கங்களை கடுமையாகத் தணிக்கை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாகத் தெரவித்தன.

தேர்தல் ஆணையத்திற்கு ஒரே ஒரு வாரத்திற்குள் பதிலளித்த இவை அரசியல் ரீதியான விளம்பரங்களை வெளியிட இதற்கென அதிகாரம் பெற்ற அமைப்பிடம் முன்பாகவே சமர்ப்பித்து உரிய சான்றிதழைப் பெற்றே வெளியிடுவோம் என்றும் இந்த விஷயத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவோம் என்றும் உறுதி கூறின.

இத்தகைய உறுதிமொழியை எழுத்துபூர்வமாக அளிப்பதற்கு முன் மிகுந்த எச்சரிக்கையுடன் தங்களது தளங்களில் வெளியாகும் செய்திகளையும் தகவல்களையும் உருவாக்கி, பதிப்பிடுவது தங்களின் நுகர்வோரின் கைகளில்தான் உள்ளது என்ற நிலையில் இவ்வாறு பங்கேற்பவர்கள் இந்த விதிமுறைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பது வெவ்வேறு வகையில்தான் இருக்கும் என்றும், எனவே தங்களின் தளங்களில் வெளியாகும் செய்திகளுக்கு தாங்கள் எவ்வகையிலும் பொறுப்பாக முடியாது என்பதையும் குறிப்பிட்டிருந்தன.

2019 மக்களவைத் தேர்தல் ஒரு 'வாட்சப்' தேர்தல் என்ற நிபுணர்களின் கருத்தையே குறுஞ் செய்தி செயலிகளின் அதீதமான செல்வாக்கு அங்கீகரிப்பதாக அமைகிறது. குறுகிய வட்டத்திற்குள் பரிமாறிக் கொள்ளப்படும் செய்திகளின் மீது செல்வாக்கு செலுத்தும் வகையில் வாட்சப் குழுக்களில் இணைந்து கொள்ள பாஜகவின் தொண்டர்கள் பல்வேறு வழிகளைக் கடைப்பிடித்ததாகவும் தெரிய வந்தது. ஒவ்வொரு தொலைபேசி எண்ணையும் ஆதார் எண்ணுடன் இணைத்ததன் மூலம் அவற்றைப் பயன்படுத்துவோர் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டுஅவர்களுக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்ட விளம்பரங்களைக் கொண்டு வலைவீசப்பட்டது.

இதற்கிடையில் ஊரோடு ஒத்துப்போகும் போக்கு நிலவிவரும் சூழலில் செய்திகளை விமர்சன ரீதியாக வழங்கும் ஒரு சிலவற்றில் ஒன்றான இணைய தளத்தின் பதிப்பாளர் ஓர் எச்சரிக்கையைச் செய்தார். "குறுஞ்செய்திகளை அனுப்ப உதவும் செயலிகளின் சேவை மூலமாக திகைப்பூட்டும் அளவிற்கு திருத்தப்பட்ட படங்கள், வீடியோக்கள், செய்திகள் பெருமளவிற்குப் பரப்பப்படுகின்றன. இந்தியாவில் தங்களது ஸ்மார்ட் ஃபோன்களில் வரும் செய்திகளைப் படித்து வருவோரின் மீது இவை செல்வாக்கு செலுத்தி வருகின்றன."

மைக்ரோசாஃப்ட் நிறுவனம் சமீபத்தில் மேற்கொண்ட ஓர் ஆய்வின்படி "64 சதவீத இந்தியர்கள் இணையத்தில் போலிச் செய்திகளையே எதிர்கொள்கின்றனர். இது ஆய்வு மேற்கொள்ளப் பட்ட 22 நாடுகளிலேயே மிக அதிகமானது" என்று தெரிவித்திருந்தது. 2018 நவம்பரில் பிபிசி உலக சேவை நிறுவனம் ஓர் ஆய்வை மேற்கொண்டது. குறுஞ்செய்தி சேவைகளின் மூலமாக தீவிரமாக சமூக

ஊடகங்களில் தாங்களாகவே விரும்பி செயல்பட்டு வருவோரின் செய்திகளில் வெளிப்படும் 'தேசியவாதம்' என்று அவர்கள் கூறிக் கொள்வதுதான் போலிச் செய்திகளை அதிக அளவில் பரப்பும் சாதனமாக உள்ளது என்று அது தெரிவித்தது. "தேசிய அடையாளத்தை உணர்வு பூர்வமாக வலுப்படுத்த முனையும்போது உண்மைகளுக்கு மிகக் குறைவான முக்கியத்துவம்தான் கிடைக்கும்" என இந்த ஆய்வில் பங்கேற்ற ஒருவர் குறிப்பிட்டார்.

"தேசியவாத உணர்வுகளைத் தூண்டும் வகையிலான போலிச் செய்திகளை மேலும் மேலும் தள்ளிவிடும் வேலையை இடதுசாரிகளை விட வலதுசாரிகள்தான் திட்டமிட்ட வகையில் செய்து வருகின்றனர்" எனவும் சமூக ஊடகம் குறித்த ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. 'தேசவிரோதிகள்' எனக் கருதப்படும் சமூக குழுவினரை தீவிரமாக எதிர்ப்பது; கூட்டு வன்முறை, கும்பலாகச் சேர்ந்து கொண்டு அடித்து உதைப்பது போன்ற வன்முறைச் சம்பவங்களை நியாயப்படுத்துவது போன்றவற்றின் மூலம் இத்தகைய தேசியவாத உணர்வு வலுப்படுத்தப்படுகிறது. பரவலாகச் சுற்றுக்கு விடப்படும் போலிச் செய்திகளின் அளவு, சமூக ஊடகங்களில் அவை ஏற்படுத்தும் வன்முறையைத் தூண்டிவிடும் வகையிலான வாதப் பிரதிவாதங்கள் ஆகியவற்றில் இருந்தே இந்தப் பிரச்சனையின் தீவிரம் தெளிவாகிறது. எனினும் வாக்குப்பதிவில் இதன் தாக்கத்தை மதிப்பிடுவது கடினமாகும்.

2014 மக்களவைத் தேர்தலில் சமூக ஊடகங்கள் மூலமான பிரச்சாரங்கள் பெருமளவு செல்வாக்கு செலுத்தின என்று பெரிதும் நம்பப்பட்டது. எனினும் 2013 ஜூன் முதல் 2014 மே வரை மேற்கொள்ளப்பட்ட தேர்தல்கள் குறித்த தேசிய ஆய்வு (என் இ எஸ்) முடிவுகள் இந்தவாதத்திற்கு வலுச் சேர்ப்பதாக இல்லை. "இந்த ஆய்வில் பங்கேற்றவர்களில் 80 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் செய்திகளைத் தெரிந்து கொள்ள இணையத்தைப் பயன்படுத்தவில்லை; 5 சதவீதம் பேர் மட்டுமே செய்திக்காக தினமும் இணையத்தை அணுகுபவர்களாக இருக்கின்றனர்" என்பது அந்த ஆய்விலிருந்து தெரிய வந்தது. சமூக ஊடகங்களைப் பொறுத்தவரையில் 10 சதவீதம் பேரிடம் மட்டுமே முகநூல் கணக்கு இருந்தது. 3 சதவீதம் பேர் மட்டுமே ட்விட்டரை பயன்படுத்தி வந்தனர்.

இவர்களிலும் கூட மூன்றில் ஒருவர் மட்டுமே தினமும் முகநூலை

பயன்படுத்துபவராகவும், ஐந்தில் ஒருவர் மட்டுமே தினமும் ட்விட்டரை அணுகுபவராகவும் இருந்தனர். சமூக ஊடகங்களின் மூலம் அரசியல் தொடர்பான செய்திகளை தெரிந்து கொள்வதைப் பொறுத்தவரையில் மூன்றில் ஒருவரே இதற்கென சமூக ஊடகங்களைப் பயன்படுத்தினர் என்பதோடு பாதிக்கும் மேற்பட்டோர் செய்திகளைத் தெரிந்து கொள்ள அவற்றைப் பயன்படுத்துவதில்லை என்றும் தெரிவித்திருந்தனர்.

இவை அனைத்தோடு கூடவே அரசியல் செய்திகளை பாரபட்சத்தோடு வெளியிடுகின்ற பாரம்பரிய ஊடகம் மூலமே பாஜக பயனடைந்துள்ளதாகத் தெரிகிறது. 1996க்கும் 2014க்கும் இடைப்பட்ட காலத்தில் தொலைக்காட்சி மூலம் செய்திகளை பின்பற்றும் வாக்காளர்களின் எண்ணிக்கை 19 சதவீதத்தில் இருந்து 46 சதவீதமாக உயர்ந்தது என்பதையும், 1996க்கும் 2009க்கும் இடைப் பட்ட காலத்தில் அச்சு ஊடகங்கள் மூலம் செய்திகளை தெரிந்து கொள்ளும் வாக்காளர்களின் எண்ணிக்கை 12 சதவீதத்தில் இருந்து 26 சதவீதமாக உயர்ந்தது; இந்தப் போக்கு 2014 வரை தொடர்ந்தது என்பதையும், 1996 முதல் 2004 வரையிலான காலத்தில் வானொலி மூலம் செய்திகளை தெரிந்து கொள்ளும் வாக்காளர்களின் எண்ணிக்கை 12 சதவீதத்தில் இருந்து 16 சதவீதமாக மட்டுமே உயர்ந்த போதிலும் 2014-ம் ஆண்டில் இது 9 சதவீதமாகக் குறைந்தது என்பதையும் இந்தத் தேர்தல் குறித்த தேசிய ஆய்வு தெரிவித்தது.

எனினும் இதற்கு முன் எப்போதும் கண்டிராத வகையில் ஊடக வெறியாட்டம் 2014ம் ஆண்டில் வெளிப்பட்டது. கட்சிப் பிரச்சார விளம்பரத்திற்காக மட்டுமே பாஜக அத்தேர்தலில் ரூ. 5000 கோடியை ஒதுக்கியது. இது மேலும் கூடுதலாகவும் இருக்கக் கூடும். இந்தியா முழுவதிலும் மூன்று மாத காலத்திற்கு 15,000 விளம்பரப் பலகைகளை பாஜக பதிவு செய்திருந்தது. நாடு தழுவிய அளவிலும், பிரதேச அளவிலும், உள்ளூர் மொழிகளிலும் வெளிவரும் பத்திரிக்கைகளில் பளிச்சென்று தெரியக் கூடிய இடத்தில் விளம்பரங்களை 40 நாட்களுக்கு அக்கட்சி வெளியிட்டது. மேலும் இந்தி, ஆங்கில, உள்ளூர் மொழிகளில் வெளிவரும் செய்தி, பொழுதுபோக்கு, விளையாட்டு தொலைக்காட்சிகளில் நாளொன்றுக்கு 2,000 விளம்பரங் களையும் அது விலைக்கு வாங்கியிருந்தது.

ஊடகங்களில் மோடிதான் எங்கும் இருந்தார் என்பதோடு அவரது பிரச்சாரமும் தொடர்ந்து நீடித்த ஒன்றாக, சிறப்பானதாக இருந்தது. தொலைக்காட்சி செய்திகள் ஒருதலைப்பட்சமாக இருக்கின்றன என்று நினைத்தவர்களும் கூட பாஜகவிற்கு வாக்களிக்கத் தயாராக இருந்தனர். உண்மை எப்படியானதாக இருந்தபோதிலும், நாடு முழுவதும் பின்பற்றப்பட வேண்டிய முன் உதாரணமாக குஜராத் மாநிலத்தின் வளர்ச்சி உள்ளது என்ற செய்தியும் ஊடகங்களில் தொடர்ந்து சித்தரிக்கப்பட்டது. ஊடகங்களை பெருமளவு பின்பற்றும் வாக்காளர்கள் "எல்லா மாநிலங்களையும் ஒப்பிடும்போது குஜராத் மாநிலம்தான் சிறப்பாகச் செயல்படுகிறது" என நான்கு மடங்கு சொல்லக் கூடிய அளவிற்கு இந்தப் பிரச்சாரம் அமைந்திருந்தது.

இத்தகைய பிரச்சாரம் தொடர்ந்து நடைபெறுகையில் ஊடகங்களை பெருமளவு பின்பற்றுவோர் இடையே பாஜகவிற்கான ஆதரவு மிக வேகமாக அதிகரித்தது. தொலைக்காட்சிச் செய்திகளை தொடர்ந்து கவனிப்பவர்களிடையே 2013 ஜூலைக்கும் 2014 மே மாதத்திற்கும் இடையே இந்த சதவீதம் 3 லிருந்து 20 புள்ளிகள் என அதிகரித்தது. பாரம்பரியமான அச்சு ஊடகங்களின் மூலம் செய்திகளை தெரிந்து கொள்வோரிடையே இது 7 லிருந்து 20 புள்ளிகளாகவும், இணையம் மூலமாக செய்திகளைத் தெரிந்து கொள்வோரிடையே 13லிருந்து 26 புள்ளிகளாகவும் பாஜகவின் ஆதரவு அதிகரித்தது.

2014 தேர்தலுக்குப் பிறகு ஊடகத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது போலிச் செய்திகள், அப்பட்டமான பிரச்சாரம் ஆகியவற்றின் செல்வாக்கு கணிசமாக அதிகரித்துள்ளது. 2014-ல் பயன்பாட்டில் இருந்த கைபேசிகளின் எண்ணிக்கை 90 கோடி எனில் அதில் 14.3 கோடி கைபேசிகள் இணைய வசதி கொண்ட ஸ்மார்ட்ஃபோன்கள் ஆகும். 2017-ல் இது 120 கோடியாக, அதாவது மொத்த மக்கள் தொகையில் 87 சதவீதம் பேர் பயன்படுத்தும் கைபேசிகளாக உயர்ந்தது. அடுத்த ஆண்டில் இதில் பெரும் உயர்வு ஏற்படவில்லை எனினும் 42 கோடியாக இருந்த ஸ்மார்ட்ஃபோன்களின் எண்ணிக்கை 56 கோடியாக அதிகரித்தது. ஒவ்வொரு ஸ்மார்ட்ஃபோனும் பயன்படுத்தும் இணைய வசதியின் அளவும் அதற்கேற்ப அதிகரித்துக் கொண்டே போனது. 2017 தொடக்கத்தில் மாதம் 4.3 ஜி.பி.ஆக இருந்த இணையப் பயன்பாடு அந்த ஆண்டு இறுதியில் மாதம் 5.4 ஜி.பி.ஆகவும் 2018-ல் 6.8 ஜி.பி. ஆகவும் உயர்ந்தது.

இந்த உயர்விற்குப் பின்னால் ஒரு காரணமும் இருந்தது. மிகச் சிறிய, பெரிதாக யாருக்கும் தெரியாத ஒரு நிறுவனத்தை பயன்படுத்திக் கொண்டு தொலைத்தொடர்புத் துறையில் கால் பதித்த ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் இலவசமாக இணைய வசதியை வழங்கியதும் இதற்குக் காரண மாகும். ஊடகத் தளத்தில் ஏகபோக அதிகாரம் அதிகரிக்கும் போக்கை இது கணிசமான அளவில் தீவிரப்படுத்தியதோடு வாக்காளர்களின் முடிவுகள் மீது செல்வாக்கு செலுத்தும் வகையில் செய்திகளின் உள்ளடக்கத்தை திருத்தி அமைக்க வும் வழிவகுத்தது.

இன்று பாரம்பரிய ஊடகமானது போலிச் செய்திகள் பரவுவதை தடுக்க இயலாத நிலையில் உள்ளது. தத்துவார்த்த ரீதியில் செயல்படும் போக்கிற்கும் இதில் ஓரளவிற்குப் பங்குண்டு. கடந்த ஐந்து ஆண்டுகளில் மோடி ஆட்சியில் தோல்வி கள் ஏற்பட்ட போதிலும் ஊடக அதிபர்கள் அடிமைத்தனமான ஓர்மையுடன் தான் இருந்து வருகின்றனர். அப்பட்டமாகச் சொல்வதெனில் பெரும் வர்த்தக நிறுவனங்களின் நலன்களுக்கு சேவை செய்வதாகவே மோடியின் ஆட்சி அமைந் துள்ளது. முன் எப்போதும் இல்லாத வகையில் உலகளாவிய மூலதனத்தின் வழிவகைகளோடு ஒன்றிணைந்ததாக, அதன் உத்தரவுகளை நிறை வேற்றும் அடிமையாகவே இந்த ஊடகத் துறை உருவெடுத்துள்ளது.

தொலைக்காட்சிகளில் விளம்பரங்களை வெளியிடுவதற்கான வருமானம் 2018-ல் 19.2 சதவீதம் அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டில் இது கொஞ்சம் குறையுமென்றாலும் 18 சதவீத அதிகரிப்பாக ஆவது இருக்கும். டிஜிட்டல் ஊடகத்தைப் பொறுத் தவரையில் விளம்பரத்தின் மூலம் வருமானம் மிக வேகமானதாக உள்ளது. இப்போது 25.8 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ள இது 2019ல் 33.4 சதவீதமாக உயர வாய்ப்புள்ளது. மொத்த விளம்பர வருமானத்தில் டிஜிட்டல் ஊடகத்தின் பங்கு 22 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொலைக்காட்சி, அச்சு ஊடகங்களை விட பின்தங்கியிருந்த போதிலும்கூட டிஜிட்டல் ஊடகம் மிக வேகமாக முன்னேறி வருகிறது.

ஊடகங்களுக்கான விளம்பரங்களைத் தருவதற்கான பட்ஜெட்களில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றமானது பழைய வகைப்பட்ட செய்தி ஊடகங்களின் உள்ளடக்கத்தின் மீது செல்வாக்கு செலுத்து கிறது. வாசகர்களை பெருமளவிற்குக்

கவர்ந்திழுக்கும் வகையில் குறிப்பிட்ட சில வாசகங்களைக் கொண்டு சமூக ஊடகங்களில் தீவிரமாகப் பிரச்சாரம் செய்வது போன்ற வகையில் டிஜிட்டல் ரீதியான மேடைகளுக்கு இத்தகைய விளம்பரங்கள் மடைமாறிச் செல்வதைத் தடுக்கும் வகையில் அச்சு, தொலைக்காட்சி ஊடகங்கள் பல்வேறு வகையான வியாபார உத்திகளைக் கையாளுகின்றன.

வாசகர்களின் ஆர்வத்தோடு கூடவே குறிப்பிட்ட வாசகர் பிரிவின் வாங்கும் சக்தி எவ்வளவு உள்ளது என்பதை விளம்பரதாரர்கள் மதிப்பிடுவதும் இதோடு சேர்ந்து கொள்கிறது. தங்கள் ஊடக வாசகர்களின் ஆர்வத்தை லாபகரமாக்கிக் கொள்ள விளம்பரதாரர் விற்பனை செய்ய முயலும் பொருளை உண்மையிலேயே வாங்கக் கூடிய வகையில் மக்களில் ஒரு பகுதியினரை தங்கள் பக்கம் கவர்ந்திழுத்து வைத்துள்ளோம் என ஊடகங்கள் நிரூபிக்க வேண்டியுள்ளது.

இத்தகைய வியாபார உத்திகள் புதிய வகைப்பட்ட ஊடகங்களைப் போன்றே நடந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை பழைய வகைப்பட்ட ஊடகங்களின் மீது திணிக்கிறது. மோடியும் பாஜகவும் வழங்குகின்ற காரண காரியமற்ற அதீத தேசிய வாதத்தை தூக்கிப் பிடிக்கும் வகையில் புதிய ஊடகம் வெகு வேகமாக இயங்குகின்ற போது இந்த டிஜிட்டல் தளத்தின் குரலை எதிரொலிப்பதன் மூலம் அங்கு வந்து குவியும் விளம்பரத்தில் ஒரு பகுதியாவது நமக்குக் கிடைக்காதா என்று பழைய ஊடகங்கள் ஏங்கி நிற்கின்றன. இந்த அதீத தேசியவாதம் மேலாதிக்கம் செலுத்துவதற்கு ஏகபோக ஊடகங்களின் வளர்ச்சியும் கூட உதவி செய்கிறது. தனியார் லாபத்திற்காகவும் அரசியல் பிம்பங்களை வளர்த்தெடுக்கவும் உதவும் வகையில் பொது ஆதாரவளமான ஒளிபரப்பு அலைக்கற்றையின் மீதான கட்டுப்பாடுகளும் மிக மேலோட்டமானதாகவே இருக்கின்றன.

கட்டுக்குள் இல்லாத ஒழுங்குமுறை – வளர்ந்து வரும் ஏகபோகம்

17வது மக்களவை தேர்தலுக்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்ட உடனேயே கேபிள் டிவி, நேரடி அலைவசதி (டிடிஎச்) ஆகியவற்றை செயல்படுத்தி வருவோர் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி மோடியின் பெயரைத் தாங்கிய நமோ டிவி என்ற ஒரு தொலைக்காட்சியை ஒளிபரப்பத் தொடங்கினர். ஒளிபரப்புக்கான உரிய அனுமதியைப் பெறாமல் அல்லது சட்டபூர்வமான பாதுகாப்பு சோதனை

களுக்கு உட்படாமல் ஒரு வாரத்திற்கும் மேலாகவே இந்த தொலைக்காட்சியின் ஒளிபரப்பு நடந்து வருகிறது என ஏப்ரல் மாத தொடக்கத்திலேயே செய்திகளை வழங்கிவரும் இணைய தளங்கள் தெரிவித்தன. “இடைவெளி ஏதுமின்றி நரேந்திர மோடி யின் உரைகளையும் பாஜகவிற்கு ஆதரவான செய்திகளையும் மட்டுமே இந்த தொலைக்காட்சி தொடர்ந்து ஒளிபரப்பி வருகிறது” என ஸ்க்ரோல் இணைய தளம் தெரிவித்தது. “செய்திகளை வழங்கி வரும் மற்ற தொலைக்காட்சிகலைப் போல் இது இல்லை” என்றும் அந்த இணையதளம் குறிப்பிட்டது.

இதில் முக்கிய வேறுபாடு என்னவெனில் கேபிள் டிவி அல்லது நேரடி அலைவரிசை சேவையைப் பெறுகின்ற எந்தவொரு நுகர்வோரும் தனது விருப்பப்பட்டியலில் இருந்து இந்த நமோடிவி தொலைக் காட்சியை நீக்கவேமுடியாது என்பதாகும். இதுகுறித்து எதிர்க்கட்சிகள் பலவற்றின் விசாரிப்புகளுக்குப் பிறகு மத்திய அரசின் செய்தி-ஒலிபரப்புத் துறை அமைச்சகம் இந்த தொலைக் காட்சியின் தகுதி குறித்து ஆய்வு செய்தபோது கேபிள் டிவி மற்றும் நேரடி அலைவரிசை சேவையை வழங்குவோர் வழக்கமாக தங்கள் நிகழ்ச்சிகள் குறித்த தகவல்களை தெரிவிக்கும் அலைவரிசையைப் போன்ற ஒன்றுதான் இந்த நமோடிவி என்றும் அது தனியொரு தொலைக்காட்சியே அல்ல என்பதையும் கண்டறிந்தது.

தனிநபர் துதிபாடலை உருவாக்க பொது ஆதாரவளத்தை இவ்வாறு கபளீகரம் செய்வது குறித்து விரிவான அளவில் கவலை தெரிவிக்கப் பட்டபோது, சுனில் அரோரா தலைமையிலான இந்திய தேர்தல் ஆணையம் அதன் வழக்கமான சஞ்சல புத்தியோடு இந்தப் புகாரை கணக்கில் எடுத்துக் கொள்ளவே தயாராக இல்லை.

ஒழுங்கமைவு விஷயங்களை கையாளுவதில் வேண்டுமென்றே கண்டும் காணாத போக்கை கடைப்பிடிப்பது என்ற கொள்கை கடந்த ஓராண்டுக்கும் மேலாகவே பின்பற்றப்பட்டு வந்துள்ள நிலையில் உரிமை குறித்த விஷயங்கள், குறிப்பாக ஒருமுகப்போக்கை கட்டுப்படுத்தி, பன்முகத்தன்மையை உறுதிப்படுத்துவது என்ற மிக முக்கியமான, முன்னுரிமையான விஷயங்கள் தொடர்ந்து கவனிக்கப்படாமலே இருந்து வருகிறது. சாட்டிலைட் மூலமாகவும், கேபிள் மூலமாகவும் ஒளிபரப்புகளை மேற்கொள்ளும் ஹாத்வே, டிஜிட்டல்

எண்டெர்டெயின்மெண்ட் நெட்வொர்க் ஆகிய இரு முக்கியமான நிறுவனங்களை கட்டுப்படுத்தும் உரிமையை பெற்றுள்ளதன் மூலம் ரிலையன்ஸ் நிறுவனம் தனது செல்வாக்கை மேலும் விரிவுபடுத்திக் கொண்டுள்ளது. பெயரளவிற்கே வெளியில் தெரிவிக்கப்பட்ட இந்த முதலீட்டின் மூலம் பல்வேறு ஊடக உள்ளடக்கங்களில் தீர்மானகரமான அதிகாரத்தையும் அது பெற்றுள்ளது.

தன்னிடமுள்ள பல்வேறு முதலீட்டு நிறுவனங்களில் ஒன்றின் மூலம் 2018 நவம்பரில் ரிலையன்ஸ் நிறுவனம் நியூ எமர்ஜிங் வேர்ல்ட் ஆஃப் ஜர்னலிசம் என்ற புத்தம்புது நிறுவனத்தை கட்டுப்படுத்தும் உரிமையை விலைக்கு வாங்கியுள்ளது. கைபேசி மூலமாக செய்திக்கான உள்ளடக்கங்களை பல்வேறு வடிவங்களில் இந்த நிறுவனம் உருவாக்கும் திறமை கொண்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வளரும் நாடுகள் உள்ளிட்ட இதர பெரும்பாலான சந்தைகளை விட இந்தியாவில் கைபேசி சந்தையே தற்போது உச்சத்தில் உள்ளது. இதழி யல் ஆய்விற்கான ராய்ட்டர்ஸ் நிறுவனம் மேற்கொண்ட ஓர் ஆய்வில் பங்கேற்றவர்களில் 68 சதவீதம் பேர் செய்திகளை தெரிந்து கொள்ள தங்கள் ஸ்மார்ட்ஃபோனையே நம்பியிருப்பதாகத் தெரிவித்திருந்தனர். தங்கள் கைபேசியைத் தவிர வேறெந்த வசதியும் தங்களிடம் இல்லை என 31 சதவீதத்திற்கும் குறையாதவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பு மிக நீண்ட காலமாகவே நாட்டிலுள்ள ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் தொழிலை ஒழுங்குபடுத்தி பெரும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மரியாதையை உருவாக்க வேண்டும் என முயற்சித்து வந்துள்ளது. பரம்பரை குடும்பச் சொத்தை மிக கவனமாகப் பாதுகாத்து வருவதும், இலைமறை காயான முதலீட்டு முறையே அதன் வழக்கமான செயல்பாடாக இருப்பதுமான ஓர் உலகத்தில், இந்திய தொழில் கூட்டமைப்பின் இத்தகைய முயற்சியில் ஆண்டுதோறும் ஃப்ரேம்ஸ் மாநாடு என்ற நிகழ்வில் ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையைச் சேர்ந்த பெரும்புள்ளிகள் ஒன்று கூடி தங்களுக்கென தனிப்பட்ட சலுகைகளை வழங்க வேண்டும் என கோரிக்கை எழுப்புவது வழக்கமாக இருந்தது.

கையிலுள்ள புள்ளிவிவரங்களை எல்லாம் ஒன்றுதிரட்டி இத்தொழிலைப்

பற்றிய அறிக்கை ஒன்றும், எதிர்காலம் குறித்த முன்னறிவிப்பும் இந்த நிகழ்வில் வெளியாவது வழக்கம். எனினும் இந்த நிகழ்வு இத்தொழில் குறித்த தீவிர மான அல்லது சவாலான சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு தருணமாக இருந்ததில்லை. மாறாக, எரிச்சலூட்டும் சில தொழிலாளர் நலச் சட்டங்கள், அரசின் ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்புவதைத் தவிர எல்லாமே நல்லபடியாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது என்ற கூட்டு ணர்வை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு நிகழ்வாகவே அது இருந்து வந்துள்ளது.

வேறு எதைப்பற்றியும் பேசாமல் மவுனமாக இருப்பது என்ற இவர்களின் ஒப்பந்தம் 2013 மார்ச் மாதத்தில் மிகவும் அரிதான வகையில் மீறப்பட்டது. ரூபர்ட் முர்டாஷூக்கு சொந்தமான, இந்தியாவில் செயல்பட்டு வரும் ஸ்டார் டிவி குழுமத்தின் தலைமை செயல் அலுவலரான உதய் சங்கர் இந்த நிலையின் மற்றொரு பக்கத்தைக் காண முற்பட்டார். மிகுந்த கவனத்துடன் ஆராயத் தக்கதாக அவரது வார்த்தைகள் இருந்தன. இந்திய ஊடகத் தொழிலில் நம்பத்தகுந்த புள்ளி விவரங்கள் பெருமளவிற்கு இல்லவே இல்லை என்றே கூறலாம். எந்தவொரு வர்த்தகத்திலும் ஈடுபடும் ஒரு தலைவர் இடையூறுகளில் இருந்து விடுபடுவதற்கான ஒரு பாதையை கண்டறிய வேண்டுமெனில் புள்ளி விவரங்களில் ஓரளவிற்கு நம்பிக்கை வைத்தே அதைச் செய்ய முடியும். இந்த வகையில் மிகுந்த கவலைதரத்தக்க சூழலையே உதய் சங்கர் சந்திக்க வேண்டியிருந்தது. "பகுத்தறிவு பூர்வமான வர்த்தக முடிவுகளை எடுக்க வேண்டு மெனில் அதற்கு எண்கள்தான் அடித்தளமாக அமைய வேண்டும். எண்களை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக நிபுணர்களாகிய நாங்கள் இந்த எண்களை சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை எனில் எப்படி முடிவுகளை எடுக்க முடியும்? ஒரு தொலைக்காட்சி நிர்வாகி என்ற முறையில் எப்படி என்னால் செயல்பட முடிகிறது என்று சில நேரங்களில் நானே ஆச்சரியப்படுவேன். எனது பார்வையாளர்கள் பற்றி எனக்குப் போதுமான விவரம் தெரியாது. அவர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்ற விவரம் கூட எனக்குத் தெரியாது. இந்தியாவில் 14 கோடி குடும்பங்கள் கேபிள்- சாட்டிலைட் மூலம் இணைக்கப்பட்டு இருக்கின்றன என்றாலும் 6.2 கோடி குடும்பங்கள் மட்டுமே இந்தக் கணக்கில் தென்படுகின்றன. விளம்பரச் சந்தையின் அளவு என்ற அடிப்படையான விஷயத்தில் ஒத்துப்போகாத

நிலையில்தான் இந்தியாவின் முக்கிய விளம்பர நிறுவனங்கள் இருக்கின்றன.”

உள்ளார்ந்த பொருளாதார வரம்புகளை எல்லாம் கடந்து விரிவடைந்து கொண்டே செல்ல முயன்ற இந்திய ஊடகத்தின் இருபது ஆண்டுக்கால செயல்பாட்டை நினைவு கூர்வதாகவும் இந்த உரை அமைந்திருந்தது. 1990களை அடுத்து வந்த தசாப்தங்களில் நடுத்தர வர்க்கத்தின் எதிர்பார்ப்புகள் அதிகரித்ததன் விளைவாக விளம்பரத் துறை விரிவடைந்ததோடு ஊடகங்கள் விரிவடையவும் தூண்டுதலாக இருந்தது. இத்துறையின் வருவாய்க்கான திட்டமும் கூட வாசகர்கள்-பார்வையாளர்களின் நலனுக்கு உகந்த நிலையில் இருந்து விளம்பரதாரர்களின் நலனைத் திருப்திப்படுத்துவதாகவும் மாறியது.

தொலைக்காட்சித் துறையின் மொத்தவருவாயில் கிட்டத்தட்ட 67.5 சதவீதமாக இருக்கும் பார்வையாளர்களின் சந்தாவில் பெரும்பகுதியை சந்தாதாரர்களின் வீட்டுக்கு தொலைக்காட்சி சேவையை கொண்டு செல்லும் கடைசிக் கண்ணியாக விளங்கும் கேபிள் நடத்துநர்களே எடுத்துக் கொள்கின்றனர்.

அச்சு ஊடகத்தைப் பொறுத்தவரையில் மொத்தவருவாயில் 65 சதவீதம் விளம்பரங்களின் மூலமே பெறப்படுகிறது. டைம்ஸ் ஆஃப் இந்தியா, ‘ஹிந்துஸ்தான் டைம்ஸ், தி இந்து போன்ற நாடு தழுவிய பெரும் பத்திரிக்கைகளைப் பொறுத்தவரையில் மொத்த வருவாயில் 85 அல்லது அதற்கும் மேலான சதவீதத் தொகை விளம்பரங்களில் இருந்தே பெறப்படுகிறது. தொலைக்காட்சி- அச்சு ஊடகம் ஆகிய இரு துறைகளிலும் அவற்றின் வருவாயில் சந்தாதாரர்களின் பங்கு குறைந்து கொண்டு வரும் நிலையில் வாசகர்களுக்கு இது வரை வழங்கப்பட்டு வந்த முன்னுரிமை மாற்றப்பட்டு, விளம்பரதாரர்களுக்கு சிறந்தவகையில் சேவை செய்வதாக மாறியது.

1980களில் இருந்து தொடங்கி, அதையடுத்து வந்த பத்தாண்டுகளில் உலகளாவிய விளம்பரத் தொழிலானது தொடர்ந்து வேகமாக ஒருமுகப்படுத்தப்பட்டு வருவதைக் கண்டது. இந்தப் போக்கு இன்றுவரை தொடர்கிறது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நான்கு மாபெரும் நிறுவனங்கள் – அதாவது

பிரிட்டனின் டபிள்யூ ப்பி ப்பி, அமெரிக்காவின் இண்டர் பப்ளிக் மற்றும் ஓம்னிகாம், பிரான்சின் பப்ளிசிஸ் ஆகியவை- தான் உலகத்தில் உள்ள விளம்பர நிறுவனங்களில் பாதியை தங்களின் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன. இந்த வர்த்தகத்தில் அவற்றின் பங்கு அதைவிடவே அதிகமாக இருக்கும். இவற்றோடு ஜப்பானின் டெண்ட்ஸூ குழுவையும் சேர்த்துக் கொண்டால் இந்த ஐந்து பெரு நிறுவனங்களும்தான் உலகளா விய விளம்பரத் தொழிலை மேலாதிக்கம் செய்து வருகின்றன. டபிள்யூ ப்பி ப்பி நிறுவனம் தனது பங்குதாரர்களுக்கு அனுப்பிய 2017-ம் ஆண்டிற்கான வர்த்தகம் குறித்த விவரக் குறிப்பில் இந்திய விளம்பர சந்தையில் 50 சதவீதம் தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாகத் தெரிவித்திருந்தது.

இந்தப் பெரும் நிறுவனங்கள் இத்தொழில் தொடர்புடைய நிறுவனங்களை – குறிப்பாக சந்தை குறித்த ஆய்வு, வாசகர்களை அளவீடு செய்வது போன்றவற்றில் ஈடுபடும் நிறுவனங் களை – கைப்பற்றுவதன் மூலம் ஊடகங்கள் மீதான தங்கள் வலிமையை மேலும் வலுப்படுத்திக் கொள்கின்றன. தனது சுய அதிகாரத்திற்கு ஏற்படக் கூடிய – அது உண்மையானதோ அல்லது கற்பனையானதோ – எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் உடனடியாக எதிர்வினை புரியும் ஊடகத் தொழில் தனது சொந்த வர்த்தகத்திற்கான முக்கிய திறவுகோலை தன் கையில் வைத்திருக்கும் தொழிலான விளம்பரத்துறையில் அதிகரித்துக் கொண்டே வரும் ஒருமுகப்படுத்தலின் தாக்கங்கள் குறித்து வாய் திறவாமல் இருப்பது மிகுந்த வியப்பிற்குரியதே ஆகும்.

இதுபற்றிய நெடியதொரு கருத்தோட்டத்தை உருவாக்கிக் கொள்ள இந்த நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளுக்கு நாம் மீண்டும் பயணம் செய்தோமெனில், இத்தொழிலின் மிக வேகமான வளர்ச்சிக்குப் பிறகு மற்றொரு துரித வளர்ச்சிக் கட்டத்தை நோக்கி அது நகர்ந்து கொண்டிருந்ததைப் பார்ப்போம். தேசியம் என்ற கோட்டைக் கொத்தளத்தின் மீது அது நின்று கொண்டிருந்த கடைசிக் காலமும் அதுவே. 2001 ஜனவரியில் தகவல் தொழில்நுட்பம் குறித்த நாடாளுமன்ற நிலைக்குழு அச்சு ஊடகத்தில் நேரடி அந்நிய முதலீட்டை தடை செய்து வந்த நீண்ட நாள் கொள்கை பற்றிய கருத்துக்களை செவிமடுக்கத் தொடங்கியது. 2001 ஜனவரி தொடங்கி இந்த நிலைக்குழு 13 முறை கூடி மூத்த பத்திரிக்கை ஆசிரியர்கள், பத்திரிக்கையாளர்கள், ஊடகத் துறை நிபுணர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோரின் கருத்துக்களை கேட்டது.

அந்நிய முதலீடு குறித்த முக்கிய முடிவு

2001 டிசம்பர் மாத வாக்கில் இது குறித்த விவாதங்கள் இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில் நாடாளுமன்ற நிலைக்குழு தொடர்ச்சியான ஒரு பிரச்சாரத்தை எதிர்கொள்ளத் தொடங்கியது. குறிப்பாக, பரவலான அளவில் விற்பனையாகிக் கொண்டிருக்கும் இந்தி நாளிதழான தைனிக் ஜாக்ரன் இதழின் உரிமையாளரும் பாஜக நாடாளுமன்ற உறுப்பினரும் ஆன நரேந்திர மோகன் -ஐச் சார்ந்த பிரிவினர் அச்சு ஊடகத்தில் 26 சதவீதம் வரை நேரடி அந்நிய முதலீட்டை அனுமதிக்க வேண்டும் என பிரச்சாரம் செய்தனர். 2002 பிப்ரவரியில் நாடாளுமன்ற நிலைக்குழு மீண்டும் கூடியபோது அதன் முன்னால் ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு ஆலோசனைகள் இருக்குமளவிற்கு மோகனின் பிரச்சாரம் வெற்றி பெற்றிருந்தது. அதில் ஒரு ஆலோசனை மோகனின் நிலைப்பாட்டை பிரதிபலிப்பதாக இருந்தது எனில் மற்றொரு ஆலோசனை அச்சு ஊடகம் இந்தியர்களுக்கு மட்டுமே சொந்தமாக இருக்க வேண்டும் என்று ஒதுக்கீடு செய்து மத்திய அமைச்சரவை 1955-ல் நிறைவேற்றிய தீர்மானத்தை உறுதியாகப் பின்பற்ற வேண்டும் என்று கூறியது.

இந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற நிலைப்பாடு பெருமளவிற்கு ஆதரவைப் பெறத் தவறியது. 2002 பிப்ரவரியில் நடைபெற்ற நாடாளுமன்ற நிலைக்குழு கூட்டத்தில் மோகன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஒரு சில நடைமுறை உத்திகளும் கூட தோல்வியுற்றன. இடதுசாரி கட்சிகளோடு சேர்ந்து காங்கிரஸ் கட்சியும் 1955-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நிலைபாட்டையே ஆதரித்தது. எனினும் நாடாளுமன்ற நிலைக்குழுவின் முடிவுகள் இக்கொள்கையின் தொடர்ந்த செயல்பாட்டில் பெரிய மாற்றம் எதை யும் கொண்டு வரவில்லை. இந்திய ஊடகத் தொழில் மிக ஆழமான வகையில் பிளவுபட்டிருந்ததே அதற்குக் காரணமாகும். அந்நிய முதலீட்டுக்கான விதிமுறைகளை தளர்த்த வேண்டும் என்ற பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்த ஜாக்ரன் குழுவிற்கு இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்தியா டுடே, ஆனந்த பஜார் பத்ரிகா ஆகிய குழுக்களின் ஆதரவு இருந்தது. எனினும் 1990களின் தொடக்கத்திலிருந்தே நடைபெற்று வந்த இந்தப் பிரச்சாரம் பெருமளவிற்கு முன்னேறவில்லை. கணிசமான அளவிற்கு தேசிய உணர்வை முன்வைத்த வலுவான ஒரு குழுவின் எதிர்ப்பே இதற்குக் காரணமாக இருந்தது.

இந்தக் குழுவில் டைம்ஸ் ஆஃப் இந்தியா, இந்துஸ்தான் டைம்ஸ், தி இந்து ஆகிய செல்வாக்கு மிக்க மூன்று ஆங்கில நாளிதழ்கள் முறைப்படுத்தப்படாத கூட்டணியாக இருந்தன.

இந்தக் குழுவின் அபரிமிதமான வலிமைக்குப் பின்னால் பிரதேசரீதியான, குறிப்பாக தென் மாநிலங்களைச் சேர்ந்த நாளிதழ்கள் பலவற்றின் ஆதரவும் இருந்தது. இவை சிறப்பாக ஒழுங்கமைந்தவையாக இருந்ததோடு, புதுமைத் தன்மையும் நிதியளவில் பலமும் கொண்டவையாகவும் இருந்தன. தாராளமயமாக்கல் கொள்கையில் பரவலான வீச்சினை அச்சு ஊடகம் எதிர்ப்பது அல்லது விலகி நிற்பது என்பதற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை என்ற வாதத்திற்கு பதிலடியாக இந்தக் குழு வலுவான பதிலையும் முன்வைத்தது. தொலைக்காட்சி ஊடகத்தை விட அதிகமான அளவில் மக்களின் உணர்வுகளின் மீதும் அரசியல் நிகழ்வுகளின் மீதும் ஆழமான செல்வாக்கு செலுத்துகின்ற, பிரத்தியேகமானதொரு கலாச்சார அம்சம்தான் நாளிதழ்கள் என்பதே இக்குழுவின் பதிலாகும்.

இத்தகையதொரு துறையை வெளிநாட்டு முதலீட்டிற்கு திறந்துவிடுவதென்பது முற்றிலும் அந்நியமான, அரசியல் செயல்பாட்டை அரித்துப் போகச் செய்யும் வகையில் செல்வாக்கு செலுத்த வழிவகுப்பதே ஆகும். இந்தியர்களின் கைகளில் பத்திரிக்கையின் கட்டுப்பாட்டு உரிமையை வைத்திருப்பது என்பது செயல்படத்தக்க ஒன்றாக இருக்காது என்பதோடு பெரியதொரு வெளிநாட்டு முதலீட்டாளர் நுழைவதன் மூலம் சமநிலையற்ற அதிகாரமும் அதிலிருந்து உருவாகும்.

எனினும் 2000களின் தொடக்கத்தில் ஊடகத்துறைக்குள் செயல்பட்டு வந்த சக்திகளின் நிலைபாட்டில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. இந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழ் அதுவரையிலான தனது நிலைபாட்டில் இருந்து மாறியது இந்தச் சமநிலையில் முக்கிய திருப்பத்தைக் கொண்டு வந்தது. டெல்லியில் முன்னணி நாளிதழாக இருந்த அது டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் வரவுக்குப் பின் போட்டி போட்டுக் கொண்டு விலையைக் குறைப்பதில் ஏற்பட்ட இழப்பே அந்த நாளிதழ் நேரடி அந்நிய முதலீட்டிற்கு ஆதரவான குழுவுடன் இடம் பெயர்வதற்குக் காரணமாக இருந்தது. அந்த ஆண்டு ஜூன் மாதத்தில் பாஜக தலைமையிலான மத்திய அரசு அச்சு ஊடகத்தொழிலுக்குள் இருந்த வலுவான பிரிவினரின் கோபத்தையும்

எதிர்கொள்ளும் அளவிற்கு முதலீட்டுக் கொள்கையில் மாற்றத்தைக் கொண்டுவர போதுமான ஆதரவு அத்தொழிலில் நிலவுகிறது என்ற உத்தரவாதத்தை பெற்றது. அதன் விளைவாக அச்சு ஊடகத்தில் மொத்த பங்குத் தொகையில் 26 சதவீதம் அளவிற்கு நேரடி அந்நிய முதலீட்டை அனுமதித்து அரசு உத்தரவிட்டது. இதன்படி ஆசிரியர் பொறுப்பு இந்தியர்களிடமே இருக்கும் என்பதோடு செய்திக்கான திட்டங்களில் செல்வாக்கு செலுத்துமளவிற்கு அனைத்து முக்கிய பதவிகளிலும் நான்கில் மூன்று பங்கு பதவிகளில் இந்தியர்களே இருக்க வேண்டும் என்றும் இந்த உத்தரவு குறிப்பிட்டது.

இதற்கு எதிர்வினை ஆற்றுவதில் இந்திய அச்சு ஊடகத் தொழில் இரண்டாகப் பிளவுபட்டது. இத்தொழிலின் உச்ச அமைப்பான இந்திய பத்திரிக்கை கழகம் (ஐஎன்எஸ்) இந்த முடிவு சிறு மற்றும் நடுத்தர நாளிதழ்களின் அழிவிற்கு இட்டுச் செல்லும் என்று சற்று கவலையுடன் கருத்து தெரிவித்தது. பிசினெஸ் ஸ்டாண்டர்ட், இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்தியா டுடே போன்ற தனிப்பட்ட பத்திரிக்கை குழுக்கள் இத்தொழிலுக்குத் தேவைப்படுகின்ற கூடுதல் மூலதனம், நவீன தொழில்நுட்ப செயல்பாடுகள் ஆகியவற்றை கொண்டுவர இது வழிவகுக்கும் என்றும் மிகுந்த கால தாமதத்திற்குப் பிறகே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டன.

கபளீகரமான விளம்பரப் பகுதி

நேரடி அந்நிய முதலீடு குறித்து தொடர்ச்சியான வாதப் பிரதிவாதங்களில் அச்சு ஊடகம் ஈடுபட்டு வந்த அதே நேரத்தில் மறுபுறத்தில் அத்தொழில் வெளிநாட்டு நலன்களால் முற்றிலு மாகச் சூழப்படுவதற்கான வழியேற்படுத்தும் வகையில் முக்கிய நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. விளம்பர நிறுவனங்கள், சந்தை குறித்த ஆய்வு நிறுவனங்களில் 100 சதவீதம் வரை நேரடி அந்நிய முதலீட்டை அனுமதிப்பதற்கான கொள்கையை மேற்கொள்வதற்கான முயற்சி எவ்வித விவாதமும் இன்றி 2001-ம் ஆண்டில் தொடங்கப்பட்டபோது இந்திய நாளிதழ்கள் இந்தக் கொள்கையின் அறிகுறியை உணர்ந்து கொள்ளத் தவறின. அச்சு ஊடகமானது விளம்பரத்தின் மூலமான வருவாயை பெரிதும் நம்பியிருந்த ஒரு சூழலில், சந்தை குறித்த ஆய்வு நிறுவனங் களின் முடிவுகளைச் சார்ந்தே விளம்பரத்தை வெளியிடுவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு வந்த நிலையில், பாரதூரமான

விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய இந்தக் கொள்கை முடிவு எவ்வித தீவிரமான எதிர்ப்பும் இன்றி நிறைவேற்றப்பட்டது. இன்னும் சொல்வதெனில் அதன் நீண்ட கால தாக்கங்கள் குறித்து மேலோட்டமான அலசல் கூட மேற்கொள்ளப்படவில்லை.

ஊடகத்தில் வெளிநாட்டு முதலீடு குறித்து நடைபெற்று வந்த விவாதங்கள் பயனற்றவை என்பது மட்டுமின்றி மேலோட்டமானதும் கூட என்று 2002-ம் ஆண்டில் சந்தை குறித்த ஆய்வு நிபுணரும் ஊடக ஆய்வாளருமான என். பாஸ்கர ராவ் எழுதியிருந்தார். "இந்திய, வெளிநாட்டு பெருநிறுவனங்களின் ஊடகம் குறித்த திட்டங்கள் சந்தை குறித்த ஆய்வையே நம்பியுள்ளநிலையில், அதனடிப்படையில் வெளியிடப்படும் விளம்பரங்களே ஊடகத்தின் செயல்வேகத்தையும் வழியையும் தீர்மானிக்கும் நிலையில், அச்சு ஊடகத்தில் நேரடி அந்நிய முதலீடு குறித்த பொதுவிவாதம் முழுவதுமே இந்த உண்மையைக் காணத் தவறிவிட்டது" என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

அச்சு ஊடகமும், பத்திரிக்கை அதிபர்களும் நேரடி அந்நிய முதலீடு குறித்த போலிச் சண்டையில் ஈடுபட்டு உயரிய கருத்துக்களை முன்வைத்த அதே நேரத்தில் அதைச் சுற்றியிருந்த பகுதி முழுவதும் இந்திய, வெளிநாட்டு பெருநிறுவனங்களின் நலன்களால் முற்றிலுமாகவும், மிக வேகமாகவும் கைப்பற்றப்பட்டிருந்தது. இந்திய விளம்பர உலகத்தை மேலாதிக்கம் செய்து வரும் டபிள்யூ ப்பி ப்பி குழுவின் வளர்ச்சிப் பாதையைக் கொண்டே இதை விளக்கிவிட முடியும். 1990களில் உலகம் முழுவதிலும் அது ஆதிக்கம் செலுத்தி வந்த போதிலும் இந்தியாவில் முழுமையான கட்டுப்பாட்டை கொண்டதாக அது இருக்கவில்லை. அந்த நேரத்தில் இந்தியன் மார்க்கெட் ரிசெர்ச் பீரோ (ஐ எம் ஆர் பி) என்ற நிறுவனத்தின் மூலமும் தனது துணை நிறுவனங்களின் மூலமுமே அது கணிசமான செல்வாக்கை செலுத்தி வந்தது. 1993-ல் டபிள்யூ ப்பி ப்பி நிறுவனம் உலகம் முழுவதிலும் உள்ள தனது சிக்கலான வலைப்பின்னலுக்குள் கந்த்தார் குழு என்ற சந்தை ஆய்வுக்கான பிரிவை உருவாக்கியது. 1998-ல் இந்த கந்த்தார் குழு இத்துறையில் முன்னோடியாக இருந்த ஏசி நீல் சன் என்ற நிறுவனத்துடன் இணைந்து தொலைக்காட்சி நேயர்கள் குறித்த அளவீட்டுப் பிரிவை (டாம்) உருவாக்கியது. அப்போது வேகமாக வளர்ந்து வரும் இந்திய ஒளிபரப்பு தொழிலுக்கு மிகவும் தேவையான திறனை வழங்கும் என்றும் அது உறுதியளித்தது. இத்தகைய அளவீட்டு முறையில் அதன் போட்டி அமைப்பாக

இருந்தது அதன் போட்டி நிறுவனமான ஓஆர்ஜி-மார்க்- இன் ஒரு பிரிவாக இருந்த இண்டாம் ஆகும்.

2000-ம் ஆண்டில் டபிள்யூ ப்பி ப்பியும் வேறு சில கூட்டாளிகளும் சேர்ந்து உருவாக்கிய நிறுவனத்தின் மூலம் இந்த ஓஆர்ஜி-மார்க் கையகப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து டாம் மற்றும் இண்டாம் ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்தன. இதன் மூலம் தொலைக்காட்சி செய்தி நிறுவனங்களில் விளம்பரம் செய்வதை தீர்மானிக்கும் தர வரிசை முறையை கட்டுப்படுத்தும் நிறுவனமாக டபிள்யூ ப்பி ப்பி உருமாறியது.

உலகமயமாக்கல் பத்திரிக்கை வாசகர்கள் குறித்த ஆய்வுலகத்தில் மிகத் தீவிரமான மாற்றத்தைக் கொண்டு வந்தது. 1990கள் முழுவதிலும் பத்திரிக்கை தொழில், விளம்பர நிறுவனங்களின் கழகம், பத்திரிக்கை விநியோகம் குறித்த தணிக்கை அமைப்பு ஆகியவற்றின் முயற்சியால் உருவாக்கப்பட்ட தேசிய வாசகர் ஆய்வு (என் ஆர் எஸ்) அமைப்பு என்பதே இத்தொழில் குறித்த தர மதிப்பீட்டு அளவையாக நீடித்து வந்தது. 1995-ல் விளம்பரம் மற்றும் ஊடக நிறுவனங்கள் உருவாக்கிய புதியதொரு கூட்டணி இதற்கு மாற்றாக இந்திய வாசகர் ஆய்வு (ஐ ஆர் எஸ்) என்ற அமைப்பை தொடங்கியது. என் ஆர் எஸ்-ஐ எதிர்த்து நேரடியாக மோதிய ஐ ஆர் எஸ் பெருநிறுவனங்களுக்கு தகவல் தெரிவிக்கும் கால அட்டவணைக்கு உகந்த வகையில் காலாண்டு ஆய்வுகளை வழங்க உறுதியளித்தது.

இந்தப் போட்டியின் விளைவாக தங்களுக்குப் பயனேதும் தராத நிலையில் இத்தொழிலில் உள்ள முக்கிய நிறுவனங்கள் வாசகர் குறித்த அளவீட்டு முறையையே சந்தேகிக்கத் தொடங்கின. பல்வேறு பத்திரிக்கை நிறுவனங்களின் கடுமையான எதிர்ப்பை சந்தித்த நிலையில் என்ஆர்எஸ் அமைப்பு 2004-ல் தனது செயல்பாட்டை நிறுத்தியதும் ஐஆர் எஸ் இத்துறையில் ஏகபோகமானது. அதைத் தொடர்ந்த ஆண்டுகளில் ஐஆர் எஸ் அமைப்பின் செயல்பாடுகள் குறித்தும் கேள்விகள் தொடர்ந்து எழுந்தன. இந்த அமைப்போடு இணைந்திருந்த பல பத்திரிக்கைகளும் இதன் மூலம் தங்களுக்கு எவ்வித பலனும் இல்லை என்று கூறி ஆதரவை விலக்கிக் கொள்வோம் என்று அச்சுறுத்திய நிலையில் அதன் வாசகர் எண்ணிக்கை குறித்த துவக்க நிலை மதிப்பீடுகளை கணிசமாகத் திருத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஐஆர்

எஸ் ஆளானது.

உலகளாவிய அதிகாரத்தைப் பொறுத்தவரையில் பத்திரிக்கைகளுக்கான விளம்பரங்களை வழங்குவது குறித்து ஆலோசனை கூறுவதில் பங்கு வகித்து வந்த என் ஆர் எஸ் செயல்பாட்டை நிறுத்திய நிலையில் அதனை மேலாதிக்கம் செய்து வந்த டபிள்யூ ப்பி ப்பி நிறுவனத்தின் வலிமை ஆம்னிகாம் குழுவின் கட்டுப்பாட்டிற்குள் சென்று விட்டது. தனது இந்திய துணைநிறுவனமான ஹன்சா ஆய்வு நிறுவனத்தின் மூலம் போட்டி பத்திரிக்கை நிறுவனங்களின் கூட்டணியின் உதவியுடன் 1990களின் இறுதியில் ஐஆர் எஸ் இதற்கான ஒப்பந்தத்தைப் பெற்றது. 2008-ல் டபிள்யூ ப்பி ப்பி குழுவின் ஒரு பகுதியான ஐஎம் ஆர் பியின் தொழில்நுட்ப மேற்பார்வையில் என் ஆர் எஸ் மீண்டும் தனது செயல்பாட்டை தொடர முயற்சித்தது. அந்த முயற்சி தோல்வியடைந்த போதிலும் தொலைக்காட்சிக்கான தரவரிசையில் டபிள்யூ ப்பி ப்பி நிறுவனம் தொடர்ந்து வலுவோடு இருந்து வருகிறது.

ஊடக உரிமை, விளம்பரத் தொழில், சந்தை குறித்த ஆய்வு ஆகிய துறைகளில் ஒருமுகத் தன்மை அதிகரித்துக் கொண்டே வரும் இன்றைய நிலையோடு கூடவே மற்றொரு அம்சமும் வெளிப்படுகிறது. அதுதான் அரசியல் ரீதியான விளம்பரத்தில் மிகப் பெரும் விளம்பர நிறுவனங்களின் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே போவதாகும். 2014 தேர்தல் காலத்தில் பாஜக இண்டர் பப்ளிக் மற்றும் டபிள்யூ ப்பி ப்பி ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த விளம்பர நிறுவனங்களை மாறிமாறி பயன்படுத்திக் கொண்டது. இறுதியில் இத்தொழிலைச் சார்ந்த நிபுணர்களையே தனிப்பட்ட வகையில் தனது ஆலோசகர்களாக அது நியமித்துக் கொண்டது. செயல்திட்டங்களை உருவாக்குவதில் கருத்துக் கணிப்புகள் உதவி செய்வதோடு மக்களின் உணர்வுகளிலும் அவை செல்வாக்கு செலுத்துகின்றன. இவை டபிள்யூ ப்பி ப்பி மற்றும் ஆம்னிகாம் குழுக்களுடன் இணைந்த நிறுவனங்களால் மேற்கொள்ள ப்படுகின்றன.

பொது நோக்கத்திற்கு சேவை செய்யும் ஒரு நிறுவனம் என்ற வகையில் அதை ஆழமாக அரிக்கும் சக்தியாக உலகமயமாக்கல் விளங்குகிறது. உலகளாவிய அளவில் செயல்பட்டு வரும் விளம்பர நிறுவனங்களுக்கு அடிபணிந்து நிற்பதென்பது ஊடகத்திற்கும் அதன் வாசகர்களுக்கும் இடையே இருந்துவந்த உறவு சீர்குலையவும்

காரணமாகியுள்ளது. இதன் விளைவாக, இந்திய சூழல் உலகமயமானதாக அதிகரித்து வரும் நிலையில் பல்வேறு முக்கியமான தேர்வுகளும் அதற்குப் போட்டியாக எழுந்து வருகின்றன. மோசமான வகையில் கரைந்து போன நம்பிக்கை, மூழ்கடிக்கும் வகையில் திரண்டு வரும் போலிச் செய்திகள் ஆகிய சூழலில்தான் இன்றைய ஊடகம் உள்ளது

2. சமகாலத்தில் சாதியும், இட ஒதுக்கீடும்...

என். குணசேகரன்

(ஆனந்த் டெல்டும்டே நூலை முன்வைத்து)

இந்திய நாட்டின் முக்கிய சிந்தனையாளராகத் பேராசிரியர் ஆனந்த் டெல்டும்டே இயங்கி வருகின்றார். அவரது "சாதிக் குடியரசு"என்ற நூல் அதிக விவாதங்களையும் விமர்சனங்களையும் எழுப்பியது சமகால சாதி அடுக்கின் இயங்கு முறை, இட ஒதுக்கீடு, தலித் இயக்கம், இடதுசாரி இயக்கம் என பரந்த தளத்தில் தனது கருத்துக்களை முன்வைத்து விவாதிக்கின்றார். மார்க்சிய ஆய்வு முறையை கையாள்கிற சிந்தனையாளர் என்பதால் அவருடைய கருத்துக்கள் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் விடுதலை என்ற நோக்கில் அமைந்துள்ளன.

இந்த நூலின் உள்ளடக்கத்தில் நவீன தாராளமயம், சாதிக்கும் வர்க்கத்திற்கும் உள்ள உறவு, மதச்சார்பின்மை கோட்பாட்டின் உண்மையான பொருள், இந்திய அரசின் சில தன்மைகள், இந்துத்துவ நிகழ்ச்சி நிரல் போன்ற பல சமகாலப் பிரச்சினைகளை புதிய கோணங்களில் டெல்டும்டே விளக்குகிறார். அவரது கருத்துக்கள் மிக நுட்பமானவை, உயர்ந்த தரம் கொண்டவை; எனவே அவை மார்க்சிய இயக்கச் செயல்பாட்டுக்கு தேவையானவை. மார்க்சிய நடைமுறை நோக்கில் அவரது கருத்துக்களை ஆய்வு செய்வது அவசியமாகிறது.

சாதி -இட ஒதுக்கீடு

நூலின் முதல் தலைப்பாக இட ஒதுக்கீடு பிரச்சினை பேசப்படுகிறது. இட ஒதுக்கீடு குறித்த டெல்டும்டேவின் கருத்துக்கள் ஆழமாக பரிசீலிக்கத் தக்கன. சாதி, இடஒதுக்கீடு எனும் இரண்டு சொற்களும் பொது விவாதத்தில் பின்னி பிணைந்திருக்கின்றன என்று ஆசிரியர் தனது விளக்கத்தை துவக்குகிறார். இட ஒதுக்கீட்டு முறையே சமூக நீதியின் உயர்ந்த இலக்கு என்பது போன்றும், அனைத்துக்கும் அதுவே நிரந்தரமான தீர்வு என்றும், பல முதலாளித்துவ அரசியல் கட்சிகள் தலைதெறிக்க பேசுகின்றனர். இந்த போலித்தனத்தையும், சுயநல அரசியலையும் தகர்க்கிற வகையில் தனது கருத்துக்களை அடுக்கடுக்காக

முன்வைக்கிறார் ஆசிரியர்.

இன்றைய நிலையில் இட ஒதுக்கீட்டு முறை ஒரு பெரும் இடியாப்பசிக்கலாக மாறி விட்டது என்று கருதுகிறார் டெல்டும்டே. இந்தத் திட்டம் தவறான முறையில் உருவாக்கப்பட்டு, விளைவுகளைப்பற்றி கவலைப்படாமல் மனம்போன போக்கில் அமலாக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடும் டெல்டும்டே, இது ஆளும் வர்க்கங்களுக்குத்தான் அதிகம் பயன்பட்டுள்ளது என்கிறார். குறிப்பாக, தலித் மக்களில் ஒரு பிரிவினர் தவிர, பெரும்பகுதி தலித் மக்களுக்கு அது பயன்படவில்லை என்று ஆதாரங்களுடன் டெல்டும்டே முடிவுக்கு வருகிறார்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தினராகவும் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட பகுதியினராகவும் உள்ள அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் இட ஒதுக்கீட்டு முறை இருந்திருக்க வேண்டும்; இந்த அடிப்படையில் அது வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, சாதி ஒழிப்பு என்கிற இலக்கை நோக்கிய பயணமாக அது இருந்திருக்க வேண்டும். ஆனால் தற்போது அது பெருமளவிற்கு சாதி அடையாளங்களை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இதனால், இந்தியாவில் சாதியும் இட ஒதுக்கீடும் என்றென்றும் நிரந்தரம் என்கிற முடிவுக்கு வருகிற சூழல் ஏற்பட்டுள்ளதாக டெல்டும்டே கருதுகிறார்.

சாதி அடையாளம் சமூக சமத்துவம் ஏற்படுத்தவும், சாதி ஒழிப்பை நோக்கி சமூகத்தை முன்னெடுத்துச் செல்லவும் தேவையான நிகழ்ச்சி நிரல் பற்றி எதுவும் சிந்திக்காமல் இட ஒதுக்கீட்டினையே முதன்மைப் பிரச்சனையாக்குவது நாட்டின் அடித்தட்டு மக்களுக்கு பாதிப்பையே ஏற்படுத்தும். டெல்டும்டே குறிப்பிடும் அத்தகைய மாற்று நிகழ்ச்சி நிரல் கம்யூனிஸ்டுகளிடம் மட்டுமே உள்ளது. அதனை கம்யூனிஸ்ட்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். நவீன தாராளமய சீர்திருத்தங்கள் இட ஒதுக்கீட்டினால் கிடைக்கும் பலன்களை குறைத்துள்ள நிலையில்ே இட ஒதுக்கீட்டு கோரிக்கைகளும் தீவிரமாக எழுப்படுகின்றன. பல்வேறு மாநிலங்களில் எழுப்பப்படும் கோரிக்கைகள் குறித்தும் அவற்றை சந்தர்ப்பவாத நோக்கில் பயன்படுத்துகிற அரசியல் சக்திகளையும் டெல்டும்டே விரிவாக விளக்குகின்றார்.

பல்வேறு மாநிலங்களில் எழுப்பப்படும் இடஒதுக்கீட்டு கோரிக்கைகள் குறித்தும், அவற்றை சந்தர்ப்பவாத நோக்கோடு பயன்படுத்தும் அரசியல் இயக்கங்கள் குறித்தும், இதன் விளைவாக, பல்வேறு பிரிவினரிடம் சாதி அடையாளம் கெட்டிப்படுகிற நிலை தொடர்ந்து வருவதையும் டெல்டும்டே தனது நூலில் சுட்டிக்காட்டுகிறார். மதமும் சாதியும் உழைக்கும் வர்க்கத்தை பிளவுபடுத்துகிற வரலாறு கொண்டவை என்பதை குறிப்பிடுகிற டெல்டும்டே, அவற்றால். பயனடை வது முதலாளிகள் மற்றும் அவர்களோடு இணைந்து நிற்கும் அரசியல் சக்திகள்தான் என்பதை எடுத்துரைக்கின்றார். மக்கள் சிந்தனையிலிருந்து வாழ்வாதாரப் பிரச்சினைகளை விலக்கி வைத்திட மதமும் சாதியும் நல்ல கருவிகளாகப் பயன்படுகின்றன என்பதனை அனுபவ அடிப்படையில் அவர் விளக்குகிறார்.

குழப்பமான சொற்றொடர்

சமூக ரீதியிலும், கல்வி அடிப்படையிலும் பின்தங்கிய வகுப்பாருக்கு இட ஒதுக்கீடு அளித்திட அரசியலமைப்புச் சட்டம் வழிவகுக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு340-ல் பின்தங்கிய வகுப்பினர் (Backward classes) என்ற சொற்றொடர் இடம் பெற்றுள்ளது. ஆங்கிலத்தில் classes என்ற சொல்லுக்கு சாதி என்று பொருள் கொள்ள இயலாது. ஆனால் இந்த சொற்றொடர் “பிற்பட்ட சாதியினர்” என்கிற பொருளில்தான் பயன்பாட்டில் உள்ளது. இது ஒரு பெரும் குழப்பத்தை விளைவித்ததாக டெல்டும்டே கூறுகிறார் . இந்த குழப்பத்தை அரசியல் சக்திகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டனர் என்று கூறுகிறார்(பக்கம் 52).

இந்திய நாட்டைப் போன்ற மிகுந்த அசமத்துவ சமூக அமைப்பு கொண்டிருக்கின்ற நாட்டில் பின்தங்கிய நிலைமை என்பதனை வரையறுப்பது சிரமம். அனைத்து மக்களும் தாங்கள் பின் தங்கிய நிலையில் இருப்பதாக கூறிக் கொள்ள இயலும். சாதியம், மக்களை தலித், தலித் அல்லாதவர்கள் என்று கூறு போட்டு அரசியல் சுயநலமிகள் பலனடைய வாய்ப்பினை ஏற்படுத்துகிறது. பல பகுதிகளில் தலித்துகள், ஆதிவாசிகள்எந்த அளவிற்கு பின்தங்கிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ, அதே நிலைமைகளில்

தான் பிற்படுத்தப்பட்டோர் என்று வரையறுக்கப்படுகிற பிரிவினர் பலரும்

வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட ஒரு சாதி என்கிற கருத்தாக்கம் அந்தப் பிரிவினரில் வறிய நிலையிலுள்ள மக்களையும்கூட, அதே சாதிக் குள் இருக்கிற செல்வாக்கு மிக்க சக்திகளோடு 'நமது சொந்தங்கள்'' என்று ஒருங்கிணைய வழிவகுக்கிறது. அது மட்டுமல்லாது தலித் மக்களை எதிரிகளாகப் பார்க்கவும் அவர்களைத் தூண்டுகிறது.

எனவே, வாழ்வாதார சூழலை குறிப்பிடும் போது பின்தங்கிய நிலைமை என்று குறிப்பிட்டால் அது வர்க்க தன்மை குறித்து பேசுவ தாகவே அமையும். வர்க்கம் என்பது மிக நாசுக்காக சாதி என்று அடையாளப்படுத்தப்பட்டுவிட்டது என்கிறார் டெல்டும்டே. வர்க்க ஒற்றுமையை கட்டுவதற்கு முயல்கிற அனைவரும் எதிர்கொள்ள வேண்டிய சவாலாக இது உள்ளது.

இட ஒதுக்கீட்டின் மூன்று வடிவங்கள்

தற்போதைய வடிவத்திலான இட ஒதுக்கீட்டு முறை எங்கிருந்து தொடங்கியது? வேலை, கல்வி ஆகியவற்றில் முன்னுரிமை அளிப்பதன் வழியாக ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் பிரதி நிதித்துவத்தை வளர்ப்பது என்கிற நோக்கத்திலிருந்து இட ஒதுக்கீட்டு முறை துவங்கியது. மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற பாராளுமன்ற அவைகள், கல்வித்துறை, வேலைவாய்ப்பு என மூன்று வடிவங்களில் இட ஒதுக்கீடு அமலாக்கப்பட்டு வருகிறது. மூன்றிலும் அது எத்தகைய தாக்கத்தையும், சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை டெல்டும்டே விளக்குகிறார்.

சட்டமன்ற நாடாளுமன்ற இடங்களில் தலித் மக்களுக்கு இட ஒதுக்கீடு என்கிற முறை உள்ளது. தலித் அல்லாத இதர சாதிகளைச் சேர்ந்தவர் களின் வாக்குகளை சார்ந்து தலித் உறுப்பினர் கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இயல்பாகவே தேர்ந்தெடுக்கப்படுகிற தலித் உறுப்பினர் பெரும்பான்மை சமூகத்தையும் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியையும் சார்ந்தே செயல்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இந்த நிலையில் ஒடுக்கப்பட்டவர்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் என்பதற்கான தர்க்க நியாயங்கள் தகர்ந்து போகின்றன என்கிறார் டெல்டும்டே. முதலில் இந்த ஒதுக்கீடு 10 ஆண்டுகள் வரை இருக்கும் என்று நிச்சயிக்கப்பட்டது .அதற்குப் பிறகு முறையான பரிசோதனை நடத்தி முடிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது தொடர்ந்து இயல்பாகவே அது நீட்டிக்கப்பட்டு வருகிறது. இந்த முறையினால் பலன் பெற்றது ஆளுகிறவர்களே தவிர தலித் மக்கள் அல்ல என்று டெல்டும்டே வாதிடுகிறார். இந்தக் கருத்தில் பலருக்கு உடன்பாடு இல்லாமல் போகலாம்.

ஆனால் அரசியல் பிரதிநிதித்துவம் என்பதில் அனைவருக்கும் சம வாய்ப்பு என்கிற லட்சியத்தை அடைய சட்டமன்ற பாராளுமன்ற இடங்களில் சில இடங்களை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒதுக்கினாலே போதும் என்கிற கருத்து குறைபாடு கொண்டது. அடுத்து கல்வித் துறையில் நடைமுறையிலுள்ள இட ஒதுக்கீடு எந்த அளவிற்கு பயன் பட்டிருக்கிறது என்பதிலும் டெல்டும்டே தனது கருத்துக்களை வெளிப்படுத்துகிறார். சமமான தரமான கல்வி வாய்ப்புகள் அனை வருக்கும் கிடைப்பதற்கான ஒரு நிலை ஏற்படுகிறபோது இட ஒதுக்கீடு அர்த்தமற்றதாக ஆகிவிடும் என்று டெல்டும்டே அழுத்தமாக குறிப்பிடுகிறார்.

கார்ல் மார்க்ஸ் கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியிட்டபோதே கல்வியில் சமமான வாய்ப்புகளை ஏற்படுத்தி, கல்வி அனைவருக்கும் கிடைக்கிற சமூகத்தை உருவாக்கும் கருத்தினை வெளிப்படுத்தி இருந்தார். கம்யூனிஸ்டுகளின் கல்வி குறித்த பார்வை இதிலிருந்தே துவங்குகிறது. டெல்டும்டேவும் இதனை வலியுறுத்துகிறார். கல்வியில் தனியார்மயம் அதிகரித்து வரும் நிலையில் இட ஒதுக்கீட்டினைப் புறக்கணிக்கிற போக்கும் தற்போது உள்ளது

வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு என்கிற பிரச் சினை இந்தியாவின் தற்போதைய தொழிலாளர்கள் நிலைமைகளிலிருந்து ஆராயப்பட வேண்டும். நாட்டின் அமைப்பு ரீதியான துறைகளில் உள்ள தொழிலாளர்கள் மொத்தத் தொழிலாளர்களில் 6 சதவீதம் ஆகும். குறுகிய அளவில் உள்ள இந்த வாய்ப்பும் சுருங்கிக் கொண்டே வருகிறது. தொடர்ந்து அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த வேலைவாய்ப்புகள் குறைந்து வரும் நிலையில்தான் எல்லா சாதியினரும் தங்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று பெரும் கூச்சல் எழுப்பி போராடி வருகின்றனர்.

இதனையொட்டி டெல்டும்டே விரும்பத்தகாத ஒரு நிகழ்வு போக்கினைக் குறிப்பிடுகிறார். இட ஒதுக்கீட்டினால் ஒரு சில தலித்துகள் அல்லது ஒரு சில தலித் குடும்பங்கள் பலன் பெறுவதை காரணம் காட்டி ஒட்டுமொத்த சமூகத்திற்கும் எதிராக

வெறுப்புணர்வு தூண்டப்படுகிறது. காலம் காலமாக சமூக ரீதியாக ஒடுக்கப்பட்டு வரும் தலித் மக்கள் மீதான தாக்குதல்கள் கொடுமைகள் மேலும் அதிகரித்து வருகிறது. ஒரு குறிப்பிட்ட தனி நபருக்கு அல்லது அவர் சார்ந்திருக்கும், அவரோடு தொடர்புடைய குடும்பத்தினர் பலன் பெற்றதற்கு. அவரது முழு சாதி சமூகமும் விலை கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. தலித்துக்கள் அனைவருக்கும் இட ஒதுக்கீட்டுப் பலன் கிடைப்பதில்லை. ஆனால், தலித் மக்களுக்கு எதிரான உணர்வு, தலித் அல்லாத மக்கள் மீது தீவிரமாகும் நிலை உருவாகி, கூடுதலான சாதிக் கொடுமைகள், தாக்குதல்கள் என அது தீவிர வடிவம் எடுக்கிறது இவ்வாறான வாதங்களை டெல்டும்டே அடுக்கு கிற நிலையில் அவர் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக பேசுகிறாரோ என்ற எண்ணம் ஏற்படக்கூடும். ஆனால், அவரது நோக்கம் அதுவல்ல. இட ஒதுக்கீடு என்பது அனைத்துக்குமான சர்வரோக நிவாரணி என்ற தன்மையில் சாதி உணர்வுகளையும் அடையாள அரசியலையும் மேலோங்கச் செய்கிற சிக்கல்களைதான் அவர் வெளிப்படுத்துகிறார். இவை அனைத்தும் ஆழமாக சிந்திக்க தகுந்தது மட்டுமல்ல, சமூக சமத்துவம் நோக்கி உரிய பாதையை தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியத்தை இன்றைய நிலை ஏற்படுத்துகிறது. இந்த முடிவிற்கு வருவதற்கே டெல்டும்டே எழுத்துக்கள் நம்மை இட்டுச் செல்கின்றன.

தகுதி, திறமை..

தகுதி, திறமை ஆகியவற்றின் பெயரால் இட ஒதுக்கீடு கூடாது என்று பேசுகிறவர்களுக்கும் டெல்டும்டே சரியான பதிலடி அளிக்கின்றார். கடந்த காலங்களில் தகுதி திறமையுடன் வாழ்ந்தவர்கள் இந்தியாவை வழிநடத்திய நிலையில்தான் மனித வளர்ச்சியில் இந்தியா அதலபாதாளத்தில் இருந்து வருகிறது என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். கல்வியறிவு, வறுமை, ஊட்டச்சத்து குறைவு, நோய், குழந்தை இறப்பு உள்ளிட்ட அனைத்திலும் மிக மோசமான நிலையில் இந்தியா இருப்பது தகுதி திறமை வாய்ந்தவர்களது மோசமான நிர்வாகத்தினால் தான் எனச்சாடுகிறார் ஆசிரியர்.

அதே நேரத்தில் தலித் மக்கள் இட ஒதுக்கீட்டினால் பெரும் பலனை பெற்றுவிடுகிறார்கள் என்று கருத இயலாது. இட ஒதுக்கீடு என்பது இதுகாறும் புறக்கணிக்கப்பட்ட தலித் மக்கள் சமூகவாழ்வில் பங்கேற்பதற்கான ஒரு

வழிமுறையே தவிர அது அவர்களுக்கான சமூகநீதியின் அளவுகோலாக மாறிடாது என்று டெல்டும்டே சரியாகவே குறிப்பிடுகிறார்.

அடையாள பூர்வமான ஒரு முன்னேற்ற நடவடிக்கை என்கிற நிலையிலிருந்து மாறி ஒடுக்கப்படுகிற சாதியினரின் பின்தங்கிய நிலையை மாற்றுவதற்கான ஒரே தீர்வு என்கிற இடத்திற்கு இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டுள்ளது.அத்துடன், இட ஒதுக்கீடு தலித் மக்களுக்கு சமூகம் தருகிற பெருந்தன்மையான கொடை என்கிற நிலையை ஏற்படுத்தியுள்ளது. இட ஒதுக்கீடு சாதி நெறியை மறுபதிப்பு செய்து தலித் மக்கள் இந்த சமூகத்துக்கு நன்றிக்கடன் பட்டவர்களாக இருக்கச் செய்கிறது. இந்த கருத்துக்கள் அனைத்தும் டெல்டும்டேவினால் ஆணித்தரமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இட ஒதுக்கீடு ஏற்படுத்தியிருக்கிற விளைவுகளை பாரபட்சமின்றி அவர் அணுகுகிற முறை முக்கியமானது.

நவீன தாராளமய மாற்றம்

நவீன தாராளமயம் 1991 -ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டபோது அது முதலாளித்துவத்தின் தீவிர வடிவமாக இயங்கியது. உலகம் முழுவ தும் வெவ்வேறு வடிவங்களில் கொண்டுவரப்பட்ட நவீன தாராளமயம், அரசை மேலும் தீவிரமான ஒரு ஒடுக்குமுறைக் கருவியாக மாற்றியது. இதன் விளைவாக, மக்கள் வெவ்வேறு வகையில் தங்களது விரக்தியையும் அதிருப்தியையும் வெளிப் படுத்தினர். அடிப்படைவாதமும் மதவாதமும் மக்களிடையே தலைதூக்கியது. இந்தியாவில் இந்துத்துவ இயக்கமாக அது வடிவம் எடுத்தது.

நவீன தாராளமய காலத்தில் பொதுத்துறை வேலை வாய்ப்புகள் சுருங்கிய சூழல் ஏற்பட்டது. .அதேபோன்று கல்வியிலும் வாய்ப்புகள் குறைந்து வணிகமயம் தீவிரமாகியது. வேடிக்கை என்னவென்றால் அனைத்து வாய்ப்புக்களும் சுருங்கிய நிலையில்தான், இடஒதுக்கீட்டுக்கான கோரிக்கைகள் வீறு கொண்டு எழுந்தன!. அவற்றை பல்வேறு சமூக, சாதிப் பிரிவினர் எழுப்பினர். அவற்றை பல அரசியல் சக்திகள் தங்களது போட்டி அரசியல் லாபத்திற்கு பயன்படுத்திக் கொண்டனர்.

தனியார் துறையில் இட ஒதுக்கீடு என்கிற கோரிக்கை கோட்பாட்டு அளவில் சரியாக இருந்தாலும் தனியார் துறை நிர்வாகங்கள் இட ஒதுக் கீட்டினை

அமலாக்குமா என்கிற கேள்வியை டெல்டும்டே எழுப்புகிறார். இவை அனைத்தும் எடுத்துக்காட்டுவது என்னவென்றால் அரசுத்துறை வேலைவாய்ப்புகளும், பொதுத்துறை வேலைவாய்ப்புகளும் சுருங்கியுள்ள சூழலில் இட ஒதுக்கீடு என்பது வேலைக்கான ஒரு வழி முறையாக நீடிக்குமா? அரசியலமைப் புச் சட்டம் இட ஒதுக்கீடு முறை நமது சாதிய சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அளித்த உறுதி நிறைவேறியதா? இட ஒதுக்கீடு முறை அதன் குறிக்கோளை எட்டியதா? இந்தக் கேள்விகள் வலுவாக எழுகின்றன என்று டெல்டும்டே குறிப்பிடுகிறார்.

உள்ளாட்சி, நாடாளுமன்றம், ஜனநாயகம் மொத்த தலித் மக்கள் தொகையில் 80 சதவீதம் தலித் மக்கள் கிராமங்களில் வாழுகிற நிலையில் உள்ளாட்சி மன்றங்களில் தலித் இட ஒதுக்கீடு முறையினால் எத்தகைய பலன் கிட்டியிருக்கிறது இதனையும் டெல்டும்டே விவரிக்கின்றார். பெண்களுக்கான இட ஒதுக்கீடாக இருந்தாலும் பழைய அதிகாரமிக்க கிராம ஊராட்சித் தலைவர்களே தங்களது மனைவி அல்லது மருமகளைத் தேர்ந்தெடுக்கப்படுமாறு செய்துவிட்டு ஊராட்சி விவகாரங்கள் அனைத்தையும் அவர்களே கவனித்துக் கொள்கிற நிலை நீடிப்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். அதே போன்று எஸ்.சி, எஸ்.டி இட ஒதுக்கீடாக இருந்தாலும் கூட கிராமப்புற அதிகாரமிக்க வர்க்கத்தினரும் சாதியினரும் ஆதிக்கம் செலுத்துவதை சுட்டிக்காட்டுகின்றார். ஆக, உள்ளூர் மட்டத்தில் ஆதிக்கம் சாதியினர் பணக்கார விவசாயிகள், நிலப்பிரபுக்கள் அதிகார மையமாக செயல்படுவதில் இட ஒதுக்கீடு பெரிய மாற்றத்தை கொண்டுவரவில்லை. இதற்கு தமிழகத்தில் நடந்த மேலவளவு உள்ளிட்ட பல சம்பவங்களை எடுத்துரைக் கின்றார் டெல்டும்டே.

தற்போதுள்ள இட ஒதுக்கீடு முறை இதே நிலையில் நீடித்தால் இட ஒதுக்கீட்டு பலன் கிடைக்க வேண்டியவர்களுக்கு பதிலாக அந்த குறிப்பிட்ட வகுப்பினரின், குறிப்பிட்ட பகுதியினரின் நலன்களையே அது பாதுகாப்பதாக இருக்கிறது என்பதை டெல்டும்டே குறிப்பிடுகின்றார் இட ஒதுக்கீட்டு முறை அமலாகத் துவங்கிய காலங்களில் இந்த குறிப்பிட்ட வகுப்பினரின் மேல்மட்டத்தில் உள்ளவர்கள் மட்டுமே பலன் பெற்ற தாக கூற இயலாது ஆனால் இன்று இட ஒதுக்கீட்டின் பலனை மூன்றாவது அல்லது நான்காவது தலைமுறை அனுபவிக்க துவங்கிய நிலையில் இட ஒதுக்கீட்டு முறையில் உள்ள பிரச்சனைகள் தலைதூக்கி வருகின்றன. சட்டமன்றம் நாடாளுமன்றங்களில் ஜனநாயக பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த

வேறு வழிமுறைகளை நாடுவது அவசியம். இதற்கு இட ஒதுக்கீடு ஒன்றே தீர்வல்ல. விகிதாச்சார பிரதிநிதித்துவம் போன்ற தேர்தல் முறைகளில்அதனை சாதிக்க இயலும் என்று டெல்டும்டே கருதுகின்றார். உண்மையான ஜனநாயகத்தை நோக்கிச் செல்ல விகிதாச்சார பிரதிநிதித்துவம் போன்ற சீர்திருத்தங்கள் தேவை என்று கம்யூனிஸ்ட்கள் நீண்ட காலமாக பேசி வருகின்றனர். தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிற பொருளாதார கொள்கைகளால் ஒதுக்கீட்டுக்கு உரிய மொத்த இடங்கள் குறைந்து வருகிற நிலையில், மக்கள் தங்களுடைய சமூக பொருளாதாரம் பின்தங்கிய நிலைமையை போக்குவதற்கு சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடுதான் முழுமையான தீர்வு என்று நம்புகிற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால்தான் இட ஒதுக்கீடு கோரிக்கைகளுக்கான போராட்டங்களில் சம்பந்தப்பட்ட மக்கள் அதிக அளவில் பங்கேற்கின்றனர்.

ஆனால், பல்வேறு சாதிப் பிரிவினர் இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்துவதற்கான கோரிக்கைகளை வைப்பதில் போட்டிபோட்டு வருகின்ற நிலையில் இட ஒதுக்கீட்டில் உள்ள சிக்கல் களை பகுத்தறிவுடன் விவாதிப்பதற்கான இடமில்லாமல் போகிறது. இன்றைய பாராளுமன்ற ஜனநாயகத்தையே சுயநல சக்திகள் தங்களுக்கு சாதகமாக வளைத்துக்கொள்ள இட ஒதுக்கீட்டு முறையில் உள்ள கோளாறுகள் வாய்ப்பை தருகின்றன. இட ஒதுக்கீடு கோரிக்கைகள் அதிகரிக்கிற நிலையில் சமூகப் பிளவுகள் தீவிரமடைந்து வருவதனை தடுக்க இயலாது.

இங்கு கம்யூனிஸ்டுகளின் மாற்றுப்பார்வை முக்கியத்துவம் பெறுகிறது. சுயநல அரசியல், சாதிய சக்திகள் இட ஒதுக்கீட்டு முறையை சாதிய திரட்டலுக்கு பயன்படுத்துகிறார்கள் என்பது உண்மைதான். எனினும், நீண்ட கால சமூக ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒரு சிறு வாய்ப்பாக உள்ளது இட ஒதுக்கீடு நீடிக்க வேண்டும் என்பதில் கம்யூனிஸ்டுகள் உறுதியாக உள்ளனர். அதே சமயத்தில், டெல்டும்டே குறிப்பிடுகிற கிராமப்புற அதிகார ஆதிக்க நிலையை மாற்றிட வேண்டும். உண்மையான நிலச்சீர்திருத்தம், மக்கள் பங்கேற்புடன் விவசாய, தொழில் விரிவாக்கம் அவசியம். பெரும் கார்ப்பரேட் பெருமுதலாளித்துவ மூலதனத்தைப் பெருக்குகிற கொள்கைகளை கைவிட்டுவிட்டு, விரிவான வேலைவாய்ப்பினை ஏற்படுத்துகிற வளர்ச்சி தேவை. இத்தகு மாற்றம் வர வேண்டும் என்றால் உழைக்கும் வர்க்கங்களின் பலமான ஒற்றுமை கட்டப்பட

வேண்டும்.அப்போதுதான் அரசு அதிகாரம் உழைக்கும் மக்களிடம் என்கிற நிலை உருவாகும். இன்றைய சிக்கல்களை தீர்க்க இதுவே சரியான பாதை. *(சாதி-வர்க்க உறவு,இந்துத்துவா போன்றவை பற்றிய டெல்டும்டே கருத்துக்கள்-அடுத்த இதழில் ...)*

3. கிரீஷ் கர்னாட் : அதிகாரத்தின் தாழ்வாரங்களில் வலம் வந்த போதிலும்...

பிரளயன்

நாடகம் மற்றும் சினிமாவில் பெரும் பங்களிப்பு செய்த இந்தியாவின் மிக முக்கியமான கலை ஆளுமையும், சாகித்ய அகாதெமி, பாரதிய ஞான பீடம், காளிதாஸ் சம்மான் போன்ற மிகப்பெரும் விருதுகளால் கௌரவிக்கப்பட்டவரும், பத்மஸ்ரீ, பத்மபூஷண் போன்ற ஒன்றிய அரசு அளிக்கிற உயர் அங்கீகாரங்களைப் பெற்றவருமான கிரீஷ் கர்னாட் அண்மையில் பெங்களூருவில் தனது 81 ஆவது வயதில் காலமானார்.

நாடகம், சினிமா, புனைவெழுத்து எனப் பன்முகப் படைப்புத்திறன் கொண்டவராக இருந்தது மட்டுமல்ல ஒரு தீவிரமான களச் செயல்பாட்டாளராகவும் அவர் இருந்தார் என்பதுதான் அவரது தனிச்சிறப்பு. இறுதி காலத்தில் கடும் நோய் வாய்ப்பட்டிருந்த போதும் தான் நம்புகிற மதிப்பீடுகளுக்காக களத்தில் இறங்கி போராடுபவராக அவர் இருந்தார்.

கடந்த சில ஆண்டுகளாக சுவாசக்கோளாறுகளுக்காக எந்நேரமும் ஆக்சிஜன் பெறவேண்டிய கட்டாயத்தில் இருந்த அவர், மூக்கில் குழாய்களைச் செருகிக்கொண்டு கையில் ஆக்சிஜன் சிலிண்டரை சுமந்து கொண்டு ‘நானும் ஒரு அர்பன் நக்சல்தான்’ என எழுதப்பட்ட அட்டையை கழுத்தில் கட்டிக் கொண்டு பத்திரிகையாளர், களச்செயற்பாட்டாளர் கௌரி லங்கேஷ் படுகொலைக்கு நியாயம் கேட்டு அவர் தெருவில் அமர்ந்து போராடிய காட்சியினை அனைவரும் அறிவார்கள். ஜனநாயகத்திலும் சமயச்சார்பின்மையிலும் நம்பிக்கையுள்ள பலரது மனச்சாட்சிகளையும் உசுப்பிவிட்ட பெருஞ்செயல் அது.

கிரீஷ் கர்னாடின் தந்தை ரகுநாத் கர்னாட் ஒரு டாக்டர். மும்பையில் பணியாற்றிய டாக்டர் ரகுநாத் கர்னாட் தன்னுடன் பணியாற்றிய, ஒரு குழந்தைக்குத் தாயான இளம் விதவை கிருஷ்ணாபாயை ஆர்யசமாஜ முறைப்படி மணந்து கொண்டார். ரகுநாத்–கிருஷ்ணாபாய் தம்பதியரின் மூன்றாவது குழந்தைதான் கிரீஷ்

கர்னாட். மராத்தி பேசும் மும்பையில் பிறந்த அவரது தாய்மொழி கொங்கணி. எனினும் அவரது பள்ளிக் கல்வி மற்றும் இளமைக்காலம் முழுதும் கொங்கணக் கடற்கரைப்பிரதேசமான தார்வாரிலேயே கழிந்தது. கர்நாடகப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்த கர்னாட் ரோட் ஸ்காலர்ஷிப் பெற்று ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பயின்றார். அங்கே பயில்கிறபோது பல்லைக்கழகத்தின் மாணவர் பேரவைத் தலைவராகவும் செயல்பட்டார். அவர் அங்கே படிக்கச் செல்கிறபோதுதான் தனது முதல் நாடகமான 'யயாதி'யை எழுதுகிறார்.

ரோட் ஸ்காலர்ஷிப் பெற்று இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்ஃபோர்டு பலகலைக்கழகத்திற்குப் படிக்கச்செல்வதை அவர் தந்தையார் விரும்பவில்லை. இந்தியாவிலே பயிலும்படி அவரை வற்புறுத்துகின்றனர். தந்தையோடு நடத்திய போராட்டத்திற்குப்பிறகுதான் அவர் ஆக்ஸ்ஃபோர்டு செல்கிறார். தந்தையுடனான போராட்டம் அவரை ஒரு நாடகம் எழுதத்தூண்டியது. அந்நாடகம்தான் 'யயாதி'.

பாரதத்தின் ஆதிபர்வத்திலும் பாகவத புராணத்தின் 18ஆவது அத்தியாயத்திலும் சொல்லப்படுகிற கதைதான் இது. சுக்கிராச்சாரியாரின் மகள் தேவயானியை மணந்து கொள்கிற யயாதி, தேவயானியின் பணிப்பெண்ணான சர்மிஷ்டையிடமும் உறவு வைத்துக் கொள்கிறான். இதையறிந்த தேவயானி தன் தந்தை சுக்ராச்சாரியாரிடம் முறையிடுகிறாள். தன் மகளுக்குத் துரோகம் செய்த 'யயாதி'யை விரைவிலே முதுமையடையுமாறு சுக்ராச்சாரியார் சபித்து விடுகிறார். இப்படி சபித்த சுக்ராச்சாரியார், யயாதியின் பிள்ளைகள் யாரேனும் தங்கள் இளமையைத் தானம் தந்தால் அந்த சாபத்திலிருந்து அவன் மீளலாம் என்று விமோசனத்திற்கும் வழி சொல்கிறார். அதன்படி யயாதி, தன் இளைய மகன் புருவின் இளமையை தானமாகப் பெற்று முதுமையிலிருந்து மீள்கிறான் என்றெல்லாம் இக்கதை வளரும். இந்த புரு என்பவன்தான் கௌரவ பாண்டவர்களின் வம்சமான குரு வம்சத்தின் முதல் மன்னன். இந்த புருவின் வம்சம்தான் பின்னர் குரு வம்சம் என்று ஆகிறது.

இந்நாடகத்தை தனது தாய்மொழியான கொங்கணியிலோ அல்லது தான் புலமை பெற்றுள்ள ஆங்கில மொழியிலோ அவர் எழுதிவிடவில்லை. கன்னட மொழியில்தான்அவர் எழுதுகிறார். 'யயாதியின்' கதை நாடகமாக

எழுதப்படுகிறபோது அதற்கு வேறு ஒரு பரிமாணம் கிடைத்து விடுகிறது. மூலக்கதையில் இல்லாத புருவின் மனைவியாக வரும் சித்ரலேகா எனும் பாத்திரத்தை புதிதாக கர்னாட் உருவாக்குகிறார். சித்ரலேகா மூலமாக புருவின் இளமையைப் பறித்துக்கொண்ட யயாதியை கேள்விக்குள்ளாக்குகிறார். அந்நாடகத்தில் இப்படியொரு உரையாடல் நடக்கும்.

"சித்ரலேகா : அரசே!! திருமணத்திற்கு முன் எனக்கு புருவை யாரென்று தெரியாது; அவர் இளைஞன் என்பதாலும் பரத வம்சத்தின் வாரிசுகளை அவர் என்னுள் விதைப்பார் என்பதாலும் நான் அவரை மணந்து கொண்டேன். ஆனால் இப்போது அவர் முதுமையடைந்து விட்டார். இனி அவரால் எனக்குப் பிள்ளைகளைத் தரமுடியாது. ஆனால் உங்களால் முடியும்.

யயாதி : சித்ரலேகா என்ன சொல்கிறாய்.

சித்ரலேகா: ஆம் அரசே! உங்களது மகனின் இளைமையை நீங்கள் பறித்துக்கொண்டீர்கள்! அதனால் ஏற்படும் எல்லா விளைவுகளுக்கும் நீங்கள்தான் பொறுப்பேற்கவேண்டும்.

யயாதி : வேசையே! உன்னோடு படுக்கைக்கு என்னை அழைக்கிறாயா?" சுருக்கென முள் போல தைக்கும் அதிர்ச்சியூட்டும் மதிப்பீடுகளைக் கொண்ட நாடகம் இது.

பெற்றோர்களின் ஆசைகளை நிறைவேற்றுவதற்காக பிள்ளைகள் எவ்வாறெல்லாம் தியாகம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்பதாக கிரிஷ் கர்னாட் இக்கதையினைப் பொருள்கோடல் செய்தார். தங்களது கனவை நிறைவேற்ற தமது பிள்ளைகளின் வாழ்வை பலி கேட்கிற, தியாகம் செய்யக் கோருகிற, இன்றைய குடும்பச்சூழல்களை இழுத்து வந்து நம் கண் முன்னால் நிறுத்தும் இந்நாடகம் பெரும் வரவேற்பு பெற்றது. கிரீஷ் கர்னார்டை நோக்கி அனைவரையும் திரும்பிப்பார்க்க வைத்தது.

மேல் கல்வி பெற வெளிநாடு செல்வதற்கு முதலில் தனது பெற்றோர்கள் தம்மை அனுமதிக்கவில்லை. அவர்களது விருப்பத்தை என் மீது திணிக்க முயன்றனர். இச்சூழல்தான் யயாதி நாடகம் எழுத என்னைத் தூண்டியது

என்று குறிப்பிடும் கர்னாட், 2008இல் எழுதிய ஒரு கட்டுரையில் இவ்வாறு கூறுகிறார்: " நான் இந்நாடகத்தை எழுதுகிறபோது மிகப்பெரும் மன அழுத்தத்தில் இருந்து தப்பிப்பதற்கான வழி என்றுதான் நினைத்தேன். ஆனால் மீண்டும் அந்நினைவுகளை அசை போடுகிறபோது அந்தக் கணத்தில் ஏற்பட்ட எனது உள்ளார்ந்த பதற்றங்களை, எனது எதிர்காலத்தை நான் தியாகம் செய்ய வேண்டும் என்று கோரியவர்களிடம் உண்டான எனது மனக்கசப்பை, அந்தப் புராணக்கதை எவ்வாறெல்லாம் மிகத்துல்லியமாக பிரதிபலித்தது என்பதை எண்ணி இன்றும் கூட நான் வியப்புறுகிறேன்.

நான் யயாதியை எழுதி முடித்துவிட்ட பிறகு இங்கிலாந்துக்கு செல்கிற மூன்றுவாரகால கப்பல் பயணத்தின் போதும், ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் ஆளரவமற்ற அந்த நீண்ட வராந்தாவில் நடைபயிலும்போதும் என்னுள் ரீங்கரித்துக்கொண்டிருந்த யயாதியின் கதை பகுத்தறிவு பூர்வமாக நான் வந்தடைய முடியாத பல மதிப்பீடுகளை என்னுள் புகுத்திக்கொள்ள எனக்கு உதவியது. வீடு திரும்புவதா என்பதுகூட கடைசியில் மிகச் சிறிய பிரச்சினையாகவே எனக்குத் தோன்றியது; அந்த புராணக்கதை கடந்த காலத்தில் என்னை ஆணியடித்து இருத்திவிட்டது." (https://www.ukessays.com/essays/english-literature/a-study-of-girish-karnads-yayati-english-literature-essay.php)

உயர் கல்வி முடிந்ததும் அவர் இந்தியா திரும்புகிறார். சென்னையிலுள்ள ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக பதிப்பகத்தில் பணிக்கு சேர்கிறார். 1963 முதல் 1970 வரை சென்னையில் தான் பணி. இந்நேரத்தில் சென்னையிலுள்ள 'மெட்ராஸ் பிளேயர்ஸ்" எனும் ஆங்கிலத்தில் நாடகம் செய்யக்கூடிய ஒரு குழுவோடு இணைந்து பணியாற்றுகிறார். 1964 இல் எழுதிய 'துக்ளக்' நாடகம் அவருக்கு மிகப்பெரும் புகழை அள்ளித்தருகிறது. 1970க்கு பிறகு பணியைவிட்டு விலகி முழு நேர எழுத்தாளராக மாறுகிறார்.

"யயாதி'-யைத்தொடர்ந்து, 'ஹயவதனா", 'துக்ளக்', 'நாகமண்டலா', 'தலெதண்டெ', 'திப்பு சுல்தான் கண்ட கனசு' (திப்பு சுல்தான் கண்ட கனவு), 'ஒடகுகள பிம்பா', சிதிலமுற்ற பிம்பங்கள், 'அக்னி மத்து மளெ' (அக்கினி மற்றும் மழை), 'ரக்ஷா தங்கடி' போன்ற நாடகங்களை எழுதி இந்திய நாடகங்களின் முகவரியை

மாற்றியவரென நாம் கிரீஷ் கர்னாடை மதிப்பிடவியலும். அவரின் ஒரு சில நாடகங்களை இங்கே அலசுவதன் மூலம் கிரீஷ் கர்னாட் என்கிற ஆளுமையை சற்று கிட்டே நின்று நம்மால் பார்க்க முடியும்.

1964 இல் கிரீஷ் கர்னாட் எழுதிய நாடகமான "துக்ளக்", 14ஆம் நூற்றாண்டில் டில்லியை ஆண்ட சுல்தான் முகமது-பின் – துக்ளக்கின் வாழ்க்கையை மையமாகக் கொண்டது. முதலில் இது கன்னடத்தில் மேடையேற்றப்பட்டது. பின்னர் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டு மேடையேற்றம் கண்டது. மிகப்பெரும் லட்சியங்களை நிஜமாக்கப்போகிறேன் என்று தனது அரசியல் வாழ்வை தொடங்கிய சுல்தான் துக்ளக், கடைசியில் மீளவே முடியாத ஒரு முட்டுச்சந்தில் வந்து சிக்கிக் கொள்கிற வரலாற்று அவலத்தை சுற்றிச் சுழன்றது இந்நாடகம்.

1964 ஆம் ஆண்டு எழுதப்பட்ட 'துக்ளக்', மிகப்பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கிய நேருவின் சோசலிசப் பிரகடனங்கள், சொல்லொணா ஏமாற்றங்களில் மூழ்கடிக்கப்பட்டதை ஓர் உருவகமாகச் சித்தரித்த நாடகம். ஒரு காலத்தின் துயரத்தை ,'துக்ளக்' எனும் பாத்திர வார்ப்பின் வாயிலாக நாடகம் பார்க்கும் ஒவ்வொரு தனி மனிதரின் துயரமாக கடத்திய நாடகம் இதுவெனவும் சொல்லலாம்.

இந்நாடகம் குறித்து ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு கூறுகிறார்: "துக்ளக்கின் வரலாறு எனக்கு உணர்த்திய ஓர் விஷயம் அது மிகவும் சமகாலத்தன்மை பொதிந்ததாக இருக்கிறது என்பதைத்தான். ஓர் உண்மை என்னவென்றால் இதுவரை டில்லியை ஆண்ட அரசர்களிலே மிகவும் ஞானமிக்கவனும் அறிவார்ந்தவனுமான துக்ளக், நாட்டை ஆள்வதிலே ஆட்சியதிகாரத்தை நிர்வகிப்பதிலே மிகப்பெரும் தோல்வியைக்கண்டவன். ஆட்சிக்கு வந்த இருபதாண்டுகளிலே இந்த ஞானவான் தூள் தூளாக நொருங்கிப்போகிறான். இதற்கெல்லாம் காரணம் அவனது அவசரம், பொறுமையின்மை, எல்லாவற்றிற்கும் சரியான பதில் தன்னிடத்தில் மட்டும்தான் இருக்கிறது, தான் தான் சரி என்கிற எண்ணம், ஈவிரக்கமற்ற அவனது அணுகுமுறைகள் அவனை இந்நிலைக்கு கொண்டு வந்து விட்டுவிடுகின்றன. 1950கள் தொடங்கி சுதந்திர இந்தியாவின் முதல் இருபதாண்டு கால ஆட்சியதிகாரத்தில் துக்ளக் ஆட்சிக்கு இணையான ஒரு போக்கினையே நான்

காண்கிறேன்." (Enact, June 1971. 32)

1972 ஆம் ஆண்டு டெல்லி பழைய கோட்டையை (புராணா கிலா) பின்னணியாகக் கொண்டு ஆகப் பெரும் நாடக ஆளுமை இப்ராஹிம் அல்காஜி 'துக்ளக்' நாடகத்தை மேடையேற்றினார். மனோகர் சிங் எனும் திறம்மிக்க நடிகர் துக்ளக் பாத்திரத்தை ஏற்று நடித்தார். இந்திய நாடக வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாக இதனைச் சொல்வோரும் உண்டு. அது 1986 ஆம் ஆண்டு; 'துக்ளக்' நாடகம் மறுபடியும் டில்லியில் மேடையேற்றப்படுகிறது. கர்னாடும் பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருக்கிறார். இந்திராகாந்தி தனது பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதற்குப் பிறகு இரண்டாண்டுகள் கழித்து அது நடக்கிறது. துக்ளக் தனது தலைநகரை தக்கணத்தில் உள்ள தேவகிரிக்கு மாற்றுகிறான். இது தற்போதைய மகாராஷ்ட்ராவில் உள்ளது. அப்புதிய தலைநகருக்கு தௌலதாபாத் என்றும் பெயர் சூட்டுகிறான். நாடகத்தின் எட்டாவது காட்சியில் ,டில்லியிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட புதிய தலைநகரான தௌலதாபாத் கோட்டையை ரோந்து செய்யும் இரு காவலர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வதாக ஓர் இடம் வரும். வலுமிக்கவகையில் கோட்டையின் அரண்கள் அமைந்திருப்பது குறித்து பெருமிதம் கொள்ளும் ஒரு காவலன் இவ்வாறு சொல்வான்:

"எந்த ஒரு பெரிய படையாலும் இக்கோட்டையைத் தகர்த்துவிடமுடியுமா என்ன? சொல்லுங்க அண்ணே!" அதற்கு உடன் வரும் காவலன் சொல்வான்: "தம்பி ஒன்று தெரிந்துகொள்! வெளியிருந்து வரும் தாக்குதல்களை விட உள்ளிருந்து வரும் தாக்குதல்களால்தான் பெரும்பாலான கோட்டைகள் தகர்க்கப்பட்டுள்ளன!" இவ்வசனத்தை அந்நடிகர் மொழிந்ததுதான் தாமதம், பார்வையாளர்களிடமிருந்து ஏக காலத்தில் 'ஹா'வென ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

கே.எம்.சௌதன்யா எடுத்த ஓர் ஆவணப்படத்தில் இச்சம்பவத்தை நினைவு கூர்கிற கர்னாட் "நாடகக்கதை 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுல்தானைப் பற்றியது. ஆனால் பார்வையாளர்கள் இந்திரா காந்திக்கு நேர்ந்த கதியை தொடர்பு படுத்திக்கொண்டார்கள்." என்கிறார். 1989இல் அவர் எழுதிய நாடகம் 'தலெ தண்டெ'. தலெ தண்டெ எனில் தலையை தண்டமாக வெட்டிப் பலி கொடுப்பது எனப்பொருள். பாப்ரி மஸ்ஜித்- அயோத்யா பிரச்சினை மேலெழுந்த போது அவர்

எழுதிய நாடகம் இது. இந்நாடகம் தமிழில் 'பலிபீடம்' என மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வெளிவந்துள்ளது.

சாதிய ஏற்றத்தாழ்வு கூடாது; பிறப்பில் அனைவரும் சமம்; ஆணும் பெண்ணும் சமம் என்றெல்லாம் 12 ஆம் நூற்றாண்டில் அன்றிருந்த சாதீய மேட்டிமைகளுக்கெதிராக பிராமண சாதியில் பிறந்த பசவண்ணர் தோற்றுவித்த சரணர் இயக்கத்தைப் பின்னணியாகக் கொண்டது இந்நாடகம். வட கன்னடப் பகுதியிலுள்ள கல்யாண் நகரைத் தலைமையாகக் கொண்ட தேசத்தின் அரசன் பிஜ்ஜளன். இவனிடத்தில் அமைச்சு அலுவலராகப் பணியாற்றியவர்தான் பசவண்ணர். பிறப்பால் ஷத்திரியனல்லாத முடிதிருத்தும் சமூகத்தைச் சேர்ந்த பிஜ்ஜளனை பிராமணர் உள்ளிட்ட மேல்ஜாதியினர் மதிப்பதில்லை; இந்த உறுத்தல் அவனுக்குள் இருந்து கொண்டே இருக்கும். எனவே இவன் இயல்பாகவே பசவண்ணரது சரணர் இயக்கத்திற்கு ஆதரவாய் இருக்கிறான்.

'தலெ தண்டெ' நாடகத்தின் ஓரிடத்தில் பிஜ்ஜளன் இவ்வாறு சொல்வான்: "என்னுடைய 62 வருட ஆயுளில், என்னுள் ஒளிந்திருக்கும் எனது சாதியைத் தேடாமல் என் கண்களை நேருக்கு நேர் பார்த்து பேசுகிறவர்கள் யாரேனும் உண்டென்றால் அது சரணர்கள்தாம்! பசவண்ணரின் சீடர்கள் தாம்!!" சரணர் இயக்கத்தில் சேர்ந்துவிடுகிற ஒரு பிராமணப் பெண்ணை அவ்வியக்கத்திலுள்ள சமர் வகுப்பைச் சேர்ந்த ஒரு பையனுக்கு கல்யாணம் செய்துவைக்கிறர்கள். சரணர் இயக்கத்தினரையும் அதற்கு ஆதரவாயுள்ள பிஜ்ஜளனையும் ஒழித்துக்கட்ட காத்துக்கொண்டிருந்த சாதீய மேலாதிக்க சக்திகள், இச்சூழலைப் பயன்படுத்தி சரணர் இயக்கத்தை பிளவுபடுத்துகின்றனர்; பிஜ்ஜளனுக்கெதிராக அவன் மகன் சோவி தேவனைத் தூண்டி விடுகின்றனர். மிகப்பெரும் கலகம் மூள்கிறது. சரணர்கள் வேட்டையாடப்படுகின்றனர்; பிஜ்ஜளன் கொல்லப்படுகிறான்; சரணர்களின் பெரும் ஓலத்திற்கிடையே சோவிதேவனை போற்றித் துதி செய்யும் பிராமணர்களின் கோஷமும் ஒலிக்கிறது என்றவாறு முடிகிறது இந்நாடகம். இது ஓர் அவல நாடகம்தான்

1989 இல் எழுதப்பட்ட இந்நாடகம், ராமஜென்மபூமிக்கான மத ரீதியான அணிதிரட்சியையும் 12ஆம் நூற்றாண்டில் சரணர் இயக்கம் வீழ்த்தப்பட்டதற்குமுள்ள

இணைப்புக்கண்ணிகளை, இணை போக்குகளை அடையாளம் காட்டுகிறது எனலாம். ராமஜென்ம பூமிக்கான மதரீதியான அணி திரட்டலை வகுப்புவாதம்-சமயச்சார்பின்மை எனும் இரு எதிரிடைகளுக்குள் வைத்து விளக்கவோ விடைகாணவோ அவர் முற்படவில்லை. மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்தத் தொடங்கியதால்தான் அதற்கு எதிர்வினையாற்றும் வகையில் ராமஜென்மபூமிக்கான அணிதிரட்டலும் கலவரங்களும் வெடித்தன; மத ரீதியான அணிதிரட்டலில் ஒரு சாதீய செயல்திட்டம் பொதிந்துள்ளது என்பதைத்தான் 'தலெ தண்டெ' நாடகம் மூலமாக அவர் நமக்கு சூசகமாக சொல்ல முயன்றார்.

கிரீஷ் கர்னாடின் மற்றொரு முகம் அவரது சினிமா பங்கெடுப்பு. உண்மையில் இந்தியாவின் பலமொழி பேசும் வெகுமக்களுக்கு கிரீஷ் கர்னாடை பரவலாக அறிமுகம் செய்துவைத்தது அவரது நாடகச்செயல்பாடுகளல்ல; தமிழ், கன்னடம் ,மலையாளம், தெலுங்கு வங்காளம், மராத்தி, இந்தி போன்ற இந்திய மொழிகளில் அவர் நடித்த திரைப்படங்கள்தான்.

மேலும் அவர் ஒரு நடிகர் மட்டுமல்ல திரைக்கதையாளர், இயக்குநர் என்று பன்முகமாய்ப் பங்களித்தவர். அவர் திரைக்கதை எழுதி நடித்த சம்ஸ்காரா, அவர் பி.வி.கரந்துடன் சேர்ந்து இயக்கிய வம்ச விருக்ஷா, தப்பலியு நீனாதே மகனே, அவர் தனித்து இயக்கிய ஒந்தனொந்து காலதள்ளி, காடு, அஞ்சு மல்லிகெ, கானூரு ஹெக்கதிதி, உத்ஸவ் மற்றும் அவர் முக்கிய பாத்திரமேற்று நடித்த மந்தன், நிஷாந்த், போன்ற திரைப் படங்கள் 1960களின் பிற்பகுதியில் மேலெழுந்த சுயாதீன சினிமா, இணை சினிமா இயக்கத்தின் முக்கிய பங்களிப்புகள்.

ஒன்றிய அரசின் சங்கீத நாடக அகாதெமியின் தலைவர், லண்டனிலுள்ள இந்தியக்கலாச்சார அமைச்சகத்தின் 'நேரு மையத்தின்' இயக்குநர் என வாழ்நாளின் கணிசமான காலம் அதிகாரத்தின் தாழ்வாரங்களில் வலம் வந்தவர் எனினும் 1971-75 காலத்தில் புனே திரைப்படக்கழகத்தின் தலைவராகச் செயல்படுகிறபோது இந்திராகாந்தி அரசால் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டதை எதிர்த்து 1975இல் அந்தப்பதவியை உதறி எறிந்தவர்.

தன் வாழ்நாள் முழுதும் ஜனநாயகத்தையும் சமயச் சார்பின்மையும் உயர்த்திப்பிடிப்பவராக அவர் இருந்தார். தான் எழுதுகிற எழுத்துக்களுக்கும்

தனது நம்பிக்கைகளுக்கும் தமது செயல்பாடுகளுக்கும் இடைவெளிகளே இல்லாது வாழ்ந்தவர் அவர். முன்னெப்போதையும் விட அவரைப் போன்றவர்களின் பங்களிப்புகள் கூடுதலாக தேவைப்படுகிற நேரத்தில் கிரீஷ் கர்னாட் நம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார்.

ஜனநாயகத்தையும் சமயச்சார்பின்மையையும் உயர்த்திப்பிடிக்கிற முற்போக்கு பண்பாட்டு இயக்கங்களுக்கு அவர் மறைவு பேரிழப்பை ஏற்படுத்திச்சென்றிருக்கிறது. (pralayans@gmail.com)

4. மார்க்சின் இறுதி ஆண்டுகள்

(பீப்பிள்ஸ் டெமாக்ரசி இதழில் வெளியானது)

தமிழில்: ரமேஷ்

மார்க்சுக்கு நல்லஆறுதலளித்து வந்த கார்ல்ஸ்பாத் வெந்நீர் ஊற்றுச் சிகிச்சையை ஜெர்மானிய சோசலிசத் தொழிலாளர் இயக்கத்துக்கு எதிராக பிஸ்மார்க் கொண்டு வந்த சட்டங்கள் தடுத்தன. 1878இலிருந்தே அவரது உடல் துன்பம் அதிகமாகி அவரது பணியையும் பெருமளவிற்குப் பாதித்தது. ஆனால் நோய்க்கும், வலிக்கும் விட்டுக் கொடுக்கும் மனிதரல்ல அவர். அந்த வகையில் அவர் இறுதி வரை தன் உடலோடு போராடிக் கொண்டேயிருந்தார்.

உடல்நிலையில் ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்ட உடனேயே அவர் மீண்டும் தன் வேலையைத் தொடர்ந்தார். தனது வலிமை அனைத்தையும் திரட்டிக் கொண்டு, மூலதனத்தின் இரண்டாவது தொகுதியை பதிப்புக்கு அனுப்ப தயாரிப்புகளைத் தொடர்ந்தார். எனினும் தாங்க முடியாத தலைவலி, சித்ரவதை செய்த இருமல், நரம்பு அழற்சி, உடல் பலவீனம் ஆகியவற்றின் தொடர்த்தாக்குதல்கள் அவரது முயற்சிகளை மீண்டும் மீண்டும் தகர்த்து வந்தன. இவை சத்தமில்லாத, எனினும் வீரமிக்க போராட்டம் நிறைந்த ஆண்டுகளாகவே இருந்தன. பின்னர் ஒருமுறை எங்கெல்ஸ் குறிப்பிட்டது போல, அந்தக் காலத்தில் மார்க்சின் தயாரிப்புக் குறிப்புகள், சோர்வடையச் செய்த உடல் துயரத்துக்கெதிரான அவரது கடும்போராட்டத்திற்கான சான்றுகளாகவே இருந்தன. தனது இரும்பு உறுதியைத் தாண்டி, மார்க்ஸால் மூலதனத்தின் இரண்டாவது, மூன்றாவது புத்தகங்களை பதிப்பிப்பதற்கான தயாரிப்புகளைச் செய்ய முடியவில்லை.

ஜென்னியின் கடைசி வருடம்

தனது மனைவி எதிர்நோக்கிய நோயினால் ஏற்பட்ட துன்பம் அவருடைய துன்பத்தைவிட மார்க்சை மிகவும் சித்ரவதை செய்தது. நீண்ட காலமாகவே இறுதிப்படுத்த முடியாதிருந்த நோய், பின்னர் குணப்படுத்த இயலாத குடல் புற்றாக இருக்கலாம் என்று கண்டறியப்பட்டது. ஜென்னி தனது கடுமையான

வலியை ஆச்சரியமூட்டும் பொறுமையுடன் எதிர்கொண்டார், எனினும் அவர் தனது உற்சாகத்தை மட்டும் விடவேயில்லை. வலியால் அவதியுற்றாலும் கூட, துணிச்சலை விடாத அவர் அச்சமயத்தில் ஒரு மருத்துவருக்கு எழுதியிருந்தார்: "நான் கையில் கிடைக்கும் ஒவ்வொரு சுள்ளியையும் பற்றிக் கொள்கிறேன். என் அருமை மருத்துவரே, நான் இன்னும் அதிக காலம் வாழ விரும்புகிறேன். இது குறிப்பிடத்தக்க ஒன்றுதான்: ஒருவரின் கதை முடிவுக்கு வரும் நேரம் நெருங்கி வர, வர, அவர் 'கண்ணீரின் பூவுலக மதிப்புக்காக' மேலும், மேலும் ஏங்குகிறார்."

ஜென்னி மார்க்ஸ் தனது வாழ்க்கையின் இறுதிஆண்டுகளில் பல்வேறுநாடுகளில் செயல்பட்டு வந்த தொழிலாளர் இயக்கங்களின் ஒவ்வொரு முன்னேற்றத்தையும் ஆர்வத்துடன் கவனித்து வந்தார். 1880இன் இறுதியில் தமது வீட்டுக்கு வந்த ஆகஸ்ட் பேபலை வரவேற்பதில் அவரும், மார்க்சும் மிகவும் மகிழ்ச்சியுற்றனனர். லண்டனில் இருந்த இரண்டு "வயதான மனிதர்களிடம்" ஜெர்மன் கட்சியின் உள்நிலைமை, பொதுமக்களின் எண்ணப்போக்குகள் ஆகியவை குறித்து தகவல் தெரிவிக்கவே பேபல் அந்தப் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.. மார்க்ஸ் தம்பதிகளிடம் அவர் கட்சியின் உத்திகள் பற்றி விவாதித்ததுடன், சோஷியல்டெமாக்ரட் இதழுக்கு எழுதுவதற்கான ஒப்பந்தம் ஒன்றையும் அவர் அப்போது போட்டார். மார்க்ஸ், அவரது மனைவி ஜென்னி, எங்கெல்ஸ் ஆகிய மூவரும் நீண்டகாலமாகக் கடிதங்கள் மூலமாகவே தாங்கள் அறிந்திருந்த மக்களுடன் மிகநெருக்கமாக இருந்த ஜெர்மனி தொழிலாளர் வர்க்கத்தின் இந்த ஊக்கம் நிரம்பிய, அறிவார்ந்த தலைவர் மீது மிகுந்த தாக்கம் கொண்டனர்.. மார்க்ஸ் உடனடியாக அவரை மிகவும் சகோதர பாசத்துடன் "து"(அதிகாரபூர்வமற்றமுறையில் அழைப்பது. ஒருமை என்றும் கொள்ளலாம்) என்று விளித்தார். மார்க்சின் வீட்டுக்குத் தான் சென்றது குறித்து முப்பதாண்டுகளுக்குப் பிறகு பேசும்போது கூட பேபல் அதனை மிகுந்த நெகிழ்ச்சியுடன் இதைக் குறிப்பிட்டார்:

"நாங்கள் லண்டனில் கழித்த அந்த ஒரே ஞாயிற்றுக்கிழமையன்று, எல்லோரும் மார்க்சின் மேசைக்கு அழைக்கப்பட்டோம். நான் ஏற்கனவே திருமதி ஜென்னி மார்க்சுடன் அறிமுகமாகி விட்டேன். அவர் எனது பெருமதிப்பை உடனடி யாகப் பெற்றுவிட்ட, தனித்துவம் மிக்க ஒரு பெண்மணி. தனது விருந்தினர்களை எப்படி உற்சாகமாகவும், அன்புடனும் உபசரிப்பது என்பதை அவர் நன்கு அறிந்தவர்.

அந்த ஞாயிறன்று, தனது குழந்தைகளுடன் அங்கு வந்திருந்த, ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லாங்கெட்-ஐ மணம் புரிந்து கொண்டிருந்த ஜென்னியின் மூத்த மகளையும் சந்தித்தேன். அந்தக் காலத்தில் மனித குலத்தின் எதிரி என எங்கும் கண்டனம் செய்யப்பட்டு வந்த மார்க்ஸ் தனது பேரக் குழந்தைகளுடன் அவ்வளவு மென்மையாகவும், அன்புடனும் விளையாடிக்கொண்டிருந்தார், அந்தக் குழந்தைகள் தமது தாத்தாவை எவ்வளவு நேசித்தனர் என்பதைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். மூத்த மகள் ஜென்னியைத் தவிர அவரது இரண்டு இளைய பெண்களான டுஸ்ஸி என்று அழைக்கப்பட்ட எலியனார் (இவர் பின்னாளில் ஏவ்லிங்கின் மனைவி ஆனார்), பால் லஃபார்கின் மனைவியான லாரா ஆகியோரும் அங்கு இருந்தனர். கருத்த விழிகளைக் கொண்டிருந்த டுஸ்ஸி தனது தந்தையைப் போலவும், கருவிழிகளுடனும், சற்றே பொன்னிறக் கூந்தலுடன் இருந்த லாரா தனது தாயைப் போல வும் விளங்கினர். இருவருமே அழகாகவும், உற்சாகம் நிரம்பியவர்களாகவும் இருந்தனர்.''

அடுத்த நாள் பேபல் விடைபெற வந்தபோது, மார்க்சின் மனைவி மீண்டும் வலியில் துடித்தபடி படுக்கையில் இருந்தார். அவை மிகவும் கொடுமையான மாதங்களாகவே அவருக்கு இருந்தன. மார்க்ஸ் தனது மனைவியை விட்டு விலகாமல் அருகிலேயே இருந்தார். அவருக்கு மகிழ்ச்சியூட்டும் நோக்கத்துடன், மூத்தபெண்ணையும், அவரது குழந்தைகளையும் பார்ப்பதற்காக 1881 ஜூலை, ஆகஸ்டில் பிரான்ஸ் நாட்டிற்குச் செல்ல ஒரு பயணத்தையும் ஏற்பாடு செய்தார். மீண்டும் அவர்கள் லண்டனுக்குத் திரும்பியபோது ஜென்னி மிகவும் களைத்துப் போயிருந்தார்.

மார்க்சுக்கு நிகழ்ந்த மிகக் கசப்பான அடி

மனைவியின் உடல்நிலை குறித்த பதற்றத்தாலும், தூக்கமின்மையாலும் முற்றிலும் சோர்ந்து போன மார்க்ஸ் 1881 இலையுதிர் காலத்தில் கடும் நிமோனியாவால் தாக்கப்பட்டார். எலியனோர், லெச்சென் டெமுக் ஆகியோரின் தன்னலமற்ற பணிவிடையின் காரணமாகவே அவர் மீண்டார். ஜென்னியும், மார்க்சும் சேர்ந்து வாழ்ந்த கடைசி நாட்களைப் பற்றி எழுதிய எலியனோர், ''என் அன்னையின் அறைக்குச் செல்லப் போதிய பலத்தை அவர் பெற்ற காலை நேரத்தை

என்னால் ஒருபோதும் மறக்க முடியாது" என்று குறிப்பிடுகிறார். "அந்த நேரத்தில் அவர்கள் மீண்டும் இளைஞர்களாக ஆனார்கள். புதியதொரு வாழ்க்கையைத் தொடங்கப் போகும் தம்பதியாக, அவள் அன்பான ஓர் இளம் பெண்ணாகவும், அவர் காதல்வயப்பட்ட ஓர் இளைஞனாகவும் அப்போது தோன்றினர். நோயால் தகர்ந்துபோன ஒரு முதியவராகவோ, மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு முதிய பெண்மணியாகவும், நிரந்தரமாக ஒருவருக்கொருவர் விடைபெறப் போகின்றவர்களாக அவர்கள் இருவரும் அப்போது இல்லை."

ஜென்னி அனுபவிப்பதற்கு இன்னும் சில மகிழ்ச்சியான தருணங்கள் மீதமிருந்தன. மூலதனத்தின் மூன்றாவது பதிப்பு தேவைப்படுவதாக ஜெர்மனியிலிருந்து ஒரு செய்தி வந்தது. இங்கிலாந்திலிருந்து முதன்முறையாக மார்க்சை குறிப்பிடத்தக்க ஒரு விஞ்ஞானி எனவும், சோசலிச சிந்தனையாளர் என்றும் பாராட்டி ஒரு முன்னணிப் பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அக்டோபர் இறுதியில் வென்றெடுத்த ஒரு தேர்தல் வெற்றியின் மூலமாக, நெருக்கடிநிலைச் சட்டங்களைத் தாண்டி தான் போராடுவதையும், மார்க்சின் படிப்பினைகளால் அதிகமான அளவில் தாக்கம் பெற்று வருவதையும் ஜெர்மானியத் தொழிலாளர் இயக்கம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

எங்கெல்சின் பாராட்டு

1881 டிசம்பர் 2 அன்று ஜென்னி காலமானார். மார்க்ஸ் தாங்க வேண்டியிருந்த மிகவும் கசப்பான தாக்குதல் அது. தனது அன்பிற்குரிய மனைவியின் இளைப்பாறும் இடத்துக்குக்கூட அவரால் உடனே செல்ல முடியவில்லை. அவரது பலவீனமான உடல்நிலை காரணமாக, ஹைகேட் கல்லறைக்குச் செல்லும் ஜென்னியின் இறுதி யாத்திரையில் பங்கேற்க மருத்துவர்கள் மார்க்ஸை அனுமதிக்கவில்லை. கல்லறையில் ஜென்னியின் இறுதி நிகழ்ச்சியில் அஞ்சலை உரை நிகழ்த்திய எங்கெல்ஸ், கணவர் மீதும், குடும்பத்தினர், தோழர்கள் மீதும் ஜென்னி வைத்திருந்த பாசம் குறித்தும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தின் மீதான அவரது விசுவாசம் குறித்தும் சுட்டிக் காட்டினார். பின்வரும் வார்த்தைகளுடன் அவர் தன் உரையை நிறைவு செய்தார்:

"இவ்வளவு கூர்மையான, விமர்சனப் புரிதலுள்ள ஒரு பெண்மணி, இவ்வளவு

பாசமும் ஊக்கமும் உடையவர், இவ்வளவு பெரும் அர்ப்பணிப்புத்திறன் கொண்ட ஒருவர் – புரட்சிகர இயக்கத்துக்குச் செய்த பங்களிப்புகள் குறித்து ஒருபோதும் வெளிப்பார்வைக்குத் தென்பட்டதில்லை; எந்தப் பத்திரிகையும் அதை வெளியிட்டதுமில்லை. அவருடன் வாழ்ந்தவர்களுக்கு மட்டுமே அவர் செய்தது தெரியும்.

அவரது தனிப்பட்ட குணநலன்கள் குறித்து நான் பேசவேண்டியதில்லை. அவரது நண்பர்களுக்கு அவற்றைக் குறித்து தெரியும், அவர்கள் அதை ஒருபோதும் மறக்கமாட்டார்கள். மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதில் ஒரு பெண் தனது சொந்த மகிழ்ச்சியைக் கண்டிருப்பார் என்றால், அது இந்தப் பெண்தான்.''

தனது மனைவியின் மரணத்திலிருந்து கார்ல் மார்க்சால் விடுபடவே முடியவில்லை. ''மூர்-உம் (மார்க்ஸின் நண்பர்கள் அவரை மூர் என்றே அழைப்பார்கள்) இறந்துவிட்டார்'' என்று ஜென்னி இறந்த அந்த நாளில் எங்கெல்ஸ் உண்மையாகவே குறிப்பிட்டார். எனினும் வாழவேண்டும் என்ற உறுதி அவருக்குள் மீண்டும் எழுந்தது. அவரை செயலின்மைக்குத் தள்ளிய அந்தத் துன்பமிக்க நோயை வெல்ல அவர் உறுதியோடு இருந்தார். ''நான் மீண்டு எழுவதற்கு சிறிது காலத்தை இழக்க வேண்டியுள்ளது என்பது துரதிர்ஷ்டம்தான்'' என்று அமெரிக்காவிலிருந்த நண்பர் சோர்கேவுக்கு அவர் கடிதம் எழுதினார்.

அல்ஜீரியப் பயணம்

மருத்துவர்களின் ஆலோசனைப்படி நல்ல பருவநிலை நிலவிய இடங்களில் அடுத்த சில மாதங்களைக் கழித்து தன்னை மீட்டுக்கொள்ள அவர் முயன்றார். வைட் தீவின் வெண்ட்னோருக்கு அவர் முதலில் சென்றார். 1882 வசந்த காலத்தில் அவர் அல்ஜியர்சுக்குச் சென்றார். ஆனால் ஜென்னி இல்லாத மனவலி அவரை எங்கும் பின்தொடர்ந்தது. அத்தருணத்தில் அவர் எங்கெல்சுக்கு நெகிழ்ச்சியுடன் எழுதினார்,

''நடைமுறையில் சோக உணர்வுக்கு எதிராக மிகச்சில மனிதர்களே இருப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எனினும், எனது சிந்தனைகளின் பெரும்பகுதி என் மனைவியின் நினைவுகளாலேயே நிரம்பியுள்ளது என்பதை நான் ஏற்கவில்லையெனில் அது பொய்யாகவே இருக்கும். அவள் எனது வாழ்வின்

மிகச்சிறந்த ஒரு பகுதி.''

எனினும், மிகவும் நோயுற்றிருந்த போதும் இந்த வாரங்களில் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் எதையாவது புதிதாகக் கற்றுக்கொள் வதற்கு அவர் பயன்படுத்திக் கொண்டார். அல்ஜியர்சில் தனது மருமகனின் நண்பரான லாங்கெட்டை அவர் சந்தித்தார். லாங்கெட் அரபு மக்கள் அவதிப்பட்ட காலனிய ஒடுக்குமுறையின் நாகரீகமான, கொடூரமான வடிவங்களைப் பற்றிய பல முக்கியமான விவரங்களை மார்க்சுக்கு எடுத்துரைத்தார். அதேபோன்ற கவனத்துடன் அவர் ஐரோப்பியத் தொழிலாளர்கள் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொண்டு, கடிதங்கள் வாயிலாக எங்கெல்சுடன் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு வந்தார்.

அல்ஜீரியப் பயணம் அவரது உடல்நிலையில் எந்தவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. தெற்கு பிரான்சில் தங்கியதும் எந்தவித முன்னேற்றத்தையும் தரவில்லை. பின்னர் தனது மூத்த மகள் ஜென்னியை பாரிசின் அருகில் பார்க்கச் சென்றதும், பின் கோடையில் சுவிட்சர்லாந்துக்குச் சென்றதும்தான் அவருக்கு சற்று மெலிதான ஆறுதலை வழங்கியது. இதற்கிடையில் பேபலின் மரணம் அவருக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது. அவர் எங்கெல்சுக்கு எழுதினார்:

''இது நமது கட்சிக்கு மிகவும் துரதிர்ஷ்டவசமானது. ஜெர்மானிய (ஐரோப்பிய என்றும் குறிப்பிடலாம்) தொழிலாளி வர்க்கத் தில் தனித்துவமிக்க தலைவர் அவர்.'' அதிர்ஷ்டவசமாக, விரைவில் அந்தச் செய்தி பொய் என்று தெரிய வந்தது.

மூத்த மகளின் மரணம்

அக்டோபரில் மார்க்ஸ் சற்று வலுவான உடல்நிலையுடன் இங்கிலாந்து திரும்பினார். அவர் மூலதனம் நூலின் இதர தொகுதிகளுக்கான தனது பணியை மீண்டும் துவக்கவும், (ஜெர்மன்) கட்சிப் பத்திரிகையான ''தெ சோசியல் டெமாக்ரட்''டுக்குக் கட்டுரைகள் எழுதவும் ஏற்கனவே சிந்தித்துக் கொண்டிருந்தார். எனினும் அவரது உடல்நிலையில் ஏற்பட்ட முன்னேற்றம் தற்காலிகமானதாகவே இருந்தது. நவம்பர் மாதத்தில் லண்டனின் பனியிலிருந்து தப்பிக்க அவர் வெண்ட்னாருக்குச் சென்றார். ஆனால் அங்கும்கூட பனிக்காலத்தின் குளிரும்,

ஈரமும், அவரது உடல் நிலைக்கும் மேலும் துன்பத்தை ஏற்படுத்தின. அது இன்னும் மோசமாகும் வகையில், அவரது மூத்த மகள் ஜென்னியின் மரணச் செய்தி வந்து சேர்ந்தது; இந்தச் சோகச் செய்தியை அவரிடம் கொண்டு வந்த எலியனார் எழுதினார்:

"வாழ்வில் எனக்கு பல சோகமான தருணங்கள் இருந்துள்ளன, ஆனால் அவை எதுவும் இவ்வளவு சோகமயமானதாக இருந்ததில்லை." தன் தந்தைக்கு ஜென்னியின் மரணம் எத்தகைய துயரத்தை ஏற்படுத்தும் என்பதும் அவருக்குத் தெரியும். "என் தந்தைக்கு நான் மரண தண்டனையை விதித்து விட்டதாகவே எனக்குத் தோன்றியது. மிக நீண்ட, அச்சத்திற்குரிய இந்தப் பயணத்தில் இந்தச் செய்தியை நான் தந்தையிடம் எப்படிச் சொல்வது என்றுதான் மூளையைக் கசக்கிக் கொண்டிருந்தேன். ஆனால் இந்தத் துயரச் செய்தியை அவரிடம் சொல்ல வேண்டிய தேவையே இருக்கவில்லை; என் முகமே என்னைக் காட்டிக் கொடுத்து விட்டது. மூர் உடனடியாகக் கூறினார்: "எனதருமை ஜென்னிசென் இறந்து விட்டாள்!". அதன் பிறகு உடனடியாக பாரிசுக்குச் சென்று ஜென்னியின் குழந்தைகளுக்கு உதவுமாறு எனக்கு அவர் உத்தரவிட்டார்."

தூக்கத்தில் மரணம்

மறுநாள் மார்க்ஸ் லண்டன் திரும்பினார். தொண்டைக்குழாயில் ஏற்பட்டிருந்த அழற்சியுடன் சேர்ந்து இன்னொன்றும் அவரை மீண்டும் படுக்கையில் தள்ளியது. பல வாரங்களுக்கு அவரால் நீராகாரம் மட்டுமே எடுத்துக்கொள்ள முடிந்தது. பிப்ரவரியில் அவருக்கு நுரையீரலில் கட்டி உருவானது.

மார்ச்சில் அவர் மீண்டு வருவார் என்ற நம்பிக்கை அதிகரித்தது. லென் சென்னின் கனிவான கவனிப்பில் அவரது முக்கிய நோய்கள் கிட்டத்தட்ட சரியாகின. ஆனால் மார்க்சின் தோற்றம் ஏமாற்றமளிப்பதாக இருந்தது. இந்தக் காலத்தில் தினமும் வீட்டுக்குச் சென்று அவரை பார்க்கும் எங்கெல்ஸ் மார்ச் 14 அன்று மதியநேரம் அங்கு வந்து சேர்ந்தார். லென் சென் அவரைப் பார்த்து மார்க்ஸ் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதாகக் கூறினார். "நாங்கள் அறைக்குச் சென்றபோது, அவர் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார், ஆனால் ஒரு போதும் இனி எழமாட்டார் என்றும் தெரிந்தது. அவரது நாடித் துடிப்பும், மூச்சும் நின்று போயிருந்தன. அந்த இரண்டே நிமிடத்தில் அமைதியாக, வலியின்றி அவர் உயிரை நீத்திருந்தார்" என்று அவர் மார்க்சின் நண்பர் சோர்கேவுக்கு பின்னர் எழுதினார்.

எங்கெல்ஸ் மேலும் எழுதினார்: "மனித இனத்தில் ஒரு தலை குறைந்து விட்டது, இந்தத் தலை நம் காலத்தில் மிகவும் பெரிய தலை. தொழிலாளர்களின் இயக்கம் தொடர்கிறது. ஆனால் பிரெஞ்சுக்காரர்களும், ரஷ்யர்களும், அமெரிக்கர்களும், ஜெர்மானியர்களும் தீர்மானகரமான தருணங்களில் ஆலோசனை வேண்டித் திரும்பிய, மறுக்கமுடியாத, தெளிவான ஆலோசனையைக் கொடுத்து வந்த அந்த மையப்புள்ளி இப்போது மறைந்து விட்டது. முழுநிறைவான அறிவுபெற்ற ஒரு மேதையால்தான் அத்தகைய அறிவுரைகளைக் கொடுக்க முடியும்."

எங்கெல்சுடன் சேர்ந்து உலகின் அனைத்து நாட்டுத் தொழிலாளர்களும் அஞ்சலி செலுத்தினர். 1883 மார்ச் 17 அன்று கார்ல் மார்க்ஸ் ஹைகேட் இடுகாட்டில் தன் மனைவியின் உடலுக்கருகே அடக்கம் செய்யப்பட்டார்.

உலகத் தொழிலாளர் இயக்கம் தனது மாபெரும் தலைவருக்கு விடைகொடுத்தது. வில்லியம் லீப்னெஹ்ட் ஜெர்மனி தொழிலாளி வர்க்கத்தின் சார்பில் மார்க்சின் கல்லறையில் உறுதியேற்றார். "இத்தருணத்தில் நாம் சோகத்தில் ஆழ்வதற்குப் பதிலாக, மறைந்த தலைவரின் உணர்வின்படி செயல்படுவோம். அவர் நமக்குக் கற்பித்ததையும், ஆசைப்பட்டதையும் கூடிய விரைவில் நிதர்சனமாக்க, அனைத்து வலுவுடனும் நாம் போராடுவோம். இந்த வழியில் அவரது நினைவைப் போற்றுவோம்! மிகுந்த அன்பிற்குரிய நண்பரே! நீங்கள் எங்களுக்குக் காட்டிய பாதையில் இறுதிவரையில் நடைபோடுவோம். உங்கள் கல்லறையில் அதை உறுதிமொழியாக அளிக்கிறோம்!"

கணியம் அறக்கட்டளை

தொலை நோக்கு – Vision தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

பணி இலக்கு – Mission

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

எமது பணிகள்

கணியம் மின்னிதழ் kaniyam.com கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.

கட்டற்ற தமிழ் நூல்கள் FreeTamilEbooks.com

இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.

• தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்

• தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்

• விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்

OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல் மேறகண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள்

அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.comக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். இந்த இணைப்பில் செயல்களையும், இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

Kaniyam Foundation

Account Number : 606 1010 100 502 79

Union Bank Of India

West Tambaram, Chennai

IFSC – UBIN0560618

Account Type : Current Account